விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 08 புதன்கிழமை (21.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123

பெரும்பான்மைப் பலத்தை

## அரசு முறைகேடாக பயன்படுத்தக்கூடாது

### கரு ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான் மைப் பலத்தை 19

## பருத்தித்துறை அல்வாயில் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

### உறவினர்களுக்கிடையிலான பணக் கொடுக்கல் வாங்கல் என பொலிஸார் தெரிவிப்பு

(பருத்தித்துறை)

உறவினர்களிடையே இருந்த பகைமை வாள்வெட்டில் முடிந்ததில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலே உயிரிழந் துள்ளதுடன் மேலும் மூவர் படு காயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு 19

துறைமுக நகரால் அரசுக்குள் குழப்பம்

# ஆளும் கட்சியினருக்கு ஜனாதிபதி அழைப்பு



### இன்று முக்கிய அறிவிப்பை வெளியிடுவார்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்குள் பாரிய அதிர்வை ஏற்படுத்தியுள்ள போர்ட் சிட்டி என்ற துறைமுக நகரத் திட்டத்துடன் தொடர்புடைய உத்தேச சட்ட மூலம் குறித்து தெளிவுபடுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தயாராகியுள்ளார்.

இதற்காக ஆளும் கட்சியிலுள்ள அனைத்து அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை இன்றைய தினம் ஜனாதிபதி அழைத் திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் வரைபடத்தை மாற்றி யமைத்த கொழும்பு துறைமுக நகரத் திட்டம் சார்ந்த ஆணைக் குழு ஒன்றை அமைப் பதற்கான வர்த்தமானி 19

விஜயதாஸவின் மகன்

## கைதாகி பிணையில் விடுதலை

(கொழும்பு)

விபத்துச் சம்பவம் ஒன்று டன் தொடர்புபட்ட தான குற்றச்சாட்டில் 19

## துறைமுக நகரில் டொலர்களிலேயே சம்பளம் வழங்கப்படும்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நக ரின் முதலீட்டாளர்களுக்கு அங்குள்ள நிலத்தின் உரிமை கிடைக்காது என நகர அபி விருத்தி அதிகார சபையின் செய 19

## கொழும்புத் துறைமுக நகர் தனி இராச்சியமாக மாறும்

### உயர் நீதிமன்றில் விஜயதாஸ எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கம் 30 வருடங்களாக யுத்தம் நடத்தி யும் நாட்டின் ஒரு அங்குல இடத் தைக் கூட கைப்பற்றாத போது, தற்போதைய 19

## முல்லையில் யாசகம் பெற்று வந்த ஒருவர்

### விபத்தில் படுகாயமடைந்த நிலையில் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் யாசகம் பெற்று வந்த ஒருவர் விபத்தில் படுகாய மடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருகையில்,

ஹற்றன் டிக்கோயா 19

யாழ்ப்பாணத்தில் மேலும்

## 7 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 7 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று செவ் வாய்க்கிழமை கண்டறியப்பட் டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய 19

இந்தியாவை பகைக்க முடியாது

## கொழும்பு துறைமுக நகரத்தை பாராளுமன்றம் கண்காணிக்க வேண்டும்

### லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்தை பாராளுமன்றத்தின் கண்காணிப் பின் கீழ் கொண்டு வர வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பின 19

## வவுனியாவில் 7 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் ஏழு பேருக்கு கொரோனாத் தொற் றுள்ளமை நேற்று 19

இரட்டை முகவராக செயற்படுவதை

## பேராயர் மல்கம் ரஞ்சித் உடன் நிறுத்த வேண்டும்

### ஞானசார தேரர் தெரிவிப்பு

13ஆம் பக்கம் பார்க்க

தமிழருக்கான அதிகாரப் பகிர்வை

## இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும்

### ஜெய்சங்கர் வலியுறுத்து

3ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வீட்டுக்கிருத்தியமும் நன்றி நவிலலும்

மண்ணில் 10 - 06 - 1982

விண்ணில் 08 - 03 - 2021



கடந்த 08.03.2021 (திங்கட்கிழமை) அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் ஸ்ரீஸ்கந்தராஜா பகீரதன்**

[ பிரதி முகாமையாளர் - மக்கள் வங்கி, சுன்னாகம் கிளை ]

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (21.04.2021) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் மற்றும் வெளிநாட்டில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் தொலைபேசி மூலமாகவும் பதாகைகள், மலர் வளையங்கள் மூலமாகவும் இரங்கல் தெரிவித்தோர், அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் குடும்பத்தினர் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்போது கொரோனாத்தொற்றினால் நிலவும் இக்கட்டான சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்தியத்திற்கு அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

323 / 8, கோவில் வீதி,
நல்லூர்.

021 221 2959 (C-2013)

தகவல்
குடும்பத்தினர்



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# ஊர்காவற்றுறை இறங்குதுறையில் கடலில் தவறிவிழுந்த கஜதீபன் காயம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கஜதீபன், யாழ். ஊர்காவற்றுறை இறங்குதுறை கடலில் தவறி விழுந்து காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ள சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

அனலைதீவில் இடம்பெற்ற மரண வீட்டிற்குச் சென்று திரும்பியபோது ஊர்காவற்றுறை இறங்குதுறையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அனலைதீவில் இருந்து ஊர்காவற்றுறை கண்ணகி படகுத்துறைக்கு திரும்பிய கஜதீபன் அங்கிருந்து மற்றொரு படகில் ஏற முற்பட்டபோது காற்று காரணமாக படகு விலத்தியதால் நிலைதடுமாறி கடலில் விழுந்துள்ளார்.

உடனடியாக அங்கிருந்தவர்களால் அவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்த எதிர்பாராத சம்பவத்தில் கஜதீபனுக்கு சிறிய காயம் ஏற்பட்டதாகவும் அவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும் மேலும் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# வல்லை சந்தியில் ஹெரோயின் கடத்திய தம்பதியினர் கைது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஹெரோயின் கடத்திய தம்பதினர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வல்லைச் சந்தியில் வைத்து நேற்று மாலை சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த 40 வயதுடைய குடும்பத்தலைவரும் 38 வயதுடைய அவரது மனைவியுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 6 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். தம்பதியினரை இன்று மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-03)


**வேலையாட்கள் தேவையா?**
உங்கள் நிறுவன Vacancy களுக்கு பொருத்தமானவர்களை எம்மிடமிருந்து தெரிவு செய்யலாம். (office works, Driver, Data entry...) (6620)
DEWMAS JOB BANK
NO. 51, AMMAN ROAD, NALLUR.
074 138 3368
021 315 2500
dewmasweb.com


# சாட் நாட்டு ஜனாதிபதி கொலை



(கொழும்பு)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சாட் நாட்டின் ஜனாதிபதி, அந்நாட்டில் இடம்பெற்ற கிளர்ச்சியாளர்களுடனான மோதலில் கொல்லப்பட்டுள்ளார்.

சாட் நாட்டின் ஜனாதிபதி இத்ரிஸ் டெபி கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

சாட் நாட்டின் வடபகுதியில் உள்ள கிளர்ச்சியாளர்களுடன் ஏற்பட்ட மோதலின் போது இவர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டில் அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் போட்டியிட்டு இவர் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)


உ

**விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு**

மஹாராஜ. ராஜஸ்ரீ ...................................................... அவர்களுக்கு

அனேகநமஸ்காரம் / ஆசீர்வாதம் / உபயகுசலோபரி

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான பிலவ வருஷம் சித்திரைமாதம் 09ஆம் நாள் (22.04.2021) வியாழக்கிழமை பூர்வபக்ஷ தசமி திதியும் மக நட்சத்திரமும் சித்தாம்ருத யோகமும் கூடிய காலை 09.40 மணிமுதல் 11.37 மணிவரையுள்ள மிதுன லக்ன சுபமுகூர்த்த வேளையில்

திருச்சியைச் சேர்ந்த கௌண்டின்ய கோத்திரம்
ப்ரம்மஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணஐயர் முத்துலக்ஷ்மி தம்பதியரின்
பௌத்திரனும்
நல்லூர் "வித்யாசாகர நியாய சிரோமணி" ஸ்வர்க்கீய ஸ்ரீ
ப்ரம்மஸ்ரீ. கி.சுப்பிரமண்ய சாஸ்திரிகள் கமலாதேவி தம்பதியரின்
கனிஷ்ட புத்திரனும்
எமது சகோதரனுமாகிய
**சிரஞ்சீவி நவநீத கிருஷ்ண சர்மா**
**என்கின்ற வரனுக்கு**

சரசாலை வடக்கைச் சேர்ந்த காசிப கோத்திரம்
ப்ரம்மஸ்ரீ பரமசாமிஐயர் புவனேஸ்வரி
தம்பதியரின் பௌத்திரியும்
சரசாலை "யாகசம்ரக்ஷக விபூஷண்"
ப்ரம்மஸ்ரீ ப. சோமாஸ்கந்தசர்மா
கிரிஜாதேவி தம்பதியரின்
கனிஷ்ட புத்திரியுமாகிய
**சௌபாக்கியவதி கிருஷ்ணவேணி**
**என்கின்ற வதுவை**

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்ரஹணம் செய்வதாய் ஸ்ரீ கைலாசநாதப்பிள்ளையார் ஸ்ரீ நடேசப்பெருமாள், சரசாலை சிதம்பர விநாயகப்பெருமான், மீசாலை இலந்தைக்கூடல் வீரகத்தி விநாயகப் பெருமான் திருவருட் துணையுடனும், ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு பரமாச்சார்யார் பரிபூர்ண குரு அனுக்ரகத்துடனும் பெரியோர்கள் ஆசியுடனும் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் சாவகச்சேரி மீசாலை டச்சு வீதியில் அமைந்துள்ள **"பரமேஸ்வரி கல்யாண மண்டபத்தில்"** நடைபெற இருப்பதால், தாங்கள் தங்கள் இஷ்ட மித்ர பந்துக்களுடன் வருகை தந்து மேற்படி சுபமுகூர்த்தத்தை சிறப்பித்து தம்பதியரை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்பாக அழைக்கின்றோம்.

**பரமேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற இருந்த மேற்படி சுபமுகூர்த்த திருமண நிகழ்வானது கொவிட்-19 சூழலைக் கருத்திற்கொண்டு சரசாலை வடக்கு சரசாலையிலுள்ள மணமகள் இல்லத்தில் நடைபெறும்.**
**திருமண வரவேற்பு உபசார நிகழ்வு வெள்ளி மாலை 5.00 ற்கு இலங்கை வேந்தன் மண்டபத்திற்கு அருகில் உள்ள 33, கடைச்சாமி வீதி நீராவியடியில் அமைந்துள்ள மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**

*இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்*

ஸ்ரீமான் ஸ்ரீமதி
சு.ராதாகிருஷ்ணசர்மா அகிலாண்டேஸ்வரி குடும்பத்தினர்
ஸ்ரீமான் ஸ்ரீமதி சு.பாலகிருஷ்ணசர்மா பத்மாவதி குடும்பத்தினர்
"ஹேரம்ப பவனம்" 93-கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே:- 077 869 2341

ஸ்ரீமான் ஸ்ரீமதி
ப.சோமாஸ்கந்தசர்மா கிரிஜாதேவி குடும்பத்தினர்
சரசாலை வடக்கு, சரசாலை,
சாவகச்சேரி.
தொ.பே:- 077 352 0763

(6651)

சுபமஸ்து
(இருவீட்டார் அழைப்பு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வை உறுதிசெய்ய இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இந்தியா வலியுறுத்து

(டில்லி)

**முன்னர் வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை உறுதி செய்வதற்குரிய நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்பதே இந்திய அரசின் உறுதியான நிலைப்பாடு என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**


ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தின் மீதான வாக்களிப்பிலிருந்து விலகியபோதிலும் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கியுள்ளதாக அ.தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் தம்பித்துரைக்கு எழுதிய கடிதத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி இந்திய மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதத்தின்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் தம்பித்துரை, இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டவும் இலங்கை அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்திய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தம்பித்துரைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்ட உறுதியான, பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள



வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வை உறுதி செய்ய, முன்னர் வாக்குறுதியளித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை, அரசியலமைப் பின்படி தமிழ் மக்களுக்கு வழங்குவதாகத் தெரிவித்த அனைத்து அம்சங்களையும் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவிக்கின்ற வகையில் இந்திய அரசாங்கம் தமது நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். (நி-4)

# மாகாண சபையை பாதுகாக்க தமிழ் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்ந்தும் பிற்போடப்படுவதால் மாகாண சபை முறைமை செயலிழந்துள்ளது எனத் தமிழ் ஈழ விடுதலை இயக்க ஊடகப் பேச்சாளர் கு.சுரேந்திரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது பூர்வீகத் தாயகப் பரப்பில் காணி நிலங்கள் அபகரிக்கப்பட்டு அபிவிருத்தி என்ற பெயரிலும் தொல்லியல் என்ற பெயரிலும் குடியேற்றங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. தேர்தல் முறைகளில் மாற்றம் கொண்டு வருவதாக கூறி அரசு சட்ட சிக்கலை முன்வைத்து மாகாண சபைத் தேர்தலை மேலும் பின்னடித்து செல்கிறது.

மாகாண சபை முறைமையை அரசியல் யாப்பில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்ற முழுவீச்சோடு பேரினவாத அரசாங்கங்கள் முயற்சி செய்து வருகின்றன. இந்திய-



இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்டமையால் இந்தியாவினுடைய நேரடி அழுத்தத்தின் காரணமாக 13 ஆம் திருத்தம் காப்பாற்றப்பட்டு வருகிறது. இந்தியாவை பகைத்துக் கொள்ள விரும்பாமல் அல்லது முடியாமல், அதேநேரம் தமது முயற்சியும் கைகூடாமல் அரசு கைகட்டி நிற்கிறது.

அரசியல் சாசனத்தில் உள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக எந்த அரசுகளும் நிறைவேற்றாத நிலையில், அரசியல் தீர்விற்கான ஆலோசனைகள் நிறைவேற்றப்படுமா? அல்லது கருத்தில் கொள்ளப்படுமா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

அப்படியான தீர்வினை எட்டும் வரைக்கும், ஆகக் குறைந்தபட்சமாக கருதக்கூடிய மாகாணசபை முறைமையை பேணுவதற்கும் தமிழ் இனம் எதிர்கொண்டிருக்கும் அபாயகரமான நிலையை தடுப்பதற்கும் விரைந்து மாகாண சபைத் தேர்தலை நடத்துவது அவசியம்.

தமிழ்க் கட்சிகள், தேர்தல் அரசியலையும் தமக்குள் இருக்கும் கொள்கை முரண்பாடுகளையும் கடந்து இந்த விடயத்தை முன்னெடுக்க ஒன்றிணைந்து செயற்படுவது தற்போதைய காலத்தின் அவசியம் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

தமிழ்த் தேசியம் சார்ந்தவர்களும் மற்றைய தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துப் பயணிக்க தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கோரிக்கை விடுகிறது. இதற்கான முழுமையான செயற்பாட்டுக்கு எமது முழுமையான ஆதரவையும் வழங்கவும் தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# புள்ளிப்பொறிமுறைகளுடன் சாரதி அனுமதிப்பத்திரம் அறிமுகம்

## வாகன சாரதிகளுக்கு வருகிறது ஆப்பு

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரத்தைப் புள்ளிகள் பொறிமுறையுடன் அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

வீதி விபத்துகளால் கடந்த ஒரு மாதத்தில் மொத்தம் 650 பேர் இறந்துள்ளனர். 30 ஆண்டு கால போரில் நாம் 29 ஆயிரம் பேரை இழந்தோம். ஆனால் வீதி விபத்துகளால் அதிக உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. இதனை விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சாரதிகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு திட்டத்தை செயற்படுத்துவது முக்கிய விடயங்களில் ஒன்றாகும். புள்ளிகள் பொறிமுறையுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தை அறிமு



கப்படுத்தவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். ஆகவே ஒவ்வொரு முறையும் எவராவது சட்டத்தை மீறும்போது புள்ளிகள் கழிக்கப்படும்.

சாரதி ஒருவர் மது அருந்தியிருக்கிறாரா? என்பதைக் கண்டறிய அல்லது சாரதி போதைப்பொருள் செல்வாக்கின் கீழ் உள்ளாரா? என்பதைக் கண்டறிய போதுமான வளங்கள் எம்மிடம் இல்லை.

எனவே இச்செயன்முறையைச் சீராக்க மருந்து கண்டுபிடிப்பாளர்களை களம் இறக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-4)

# போலி தகவல்களை தடுக்கும் சட்டமூலம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இணையத்தளங்களில் பகிரப்படும் போலி தகவல்களால் மக்களிடையே பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அதனைத் தடுக்கும் வகையில் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. போலி தகவல்களிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்கும் நோக்கிலேயே இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# அனைத்து மே தின நிகழ்வுகளும் இரத்து



(கொழும்பு)

அனைத்து மே தின நிகழ்வுகளும் இரத்துச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையத்தில் அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உறுதிப்படுத்தினார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபிளசிஸ், மொயின் அதிரடி ஆட்டம்; சென்னையிடம் வீழ்ந்தது ராஜஸ்தான்



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 12ஆவது லீக் போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மும்பை - வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 188 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டுபிளஸிஸ் 33 ஓட்டங்களையும் ராயுடு 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ராஜஸ்தான் அணியின் பந்துவீச்சில், சக்கரியா 3 விக்கெட்டுகளையும் கிறிஸ் மோறிஸ் 2 விக்கெட்டுகளையும் முஷ்டபிசுர் மற்றும் டிவெட்டியா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 189 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 143 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 45 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோஸ் பட்லர் 49 ஓட்டங்களையும் ஜெய்தேவ் உனட்கட் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பந்துவீச்சில், மொயின் அலி 3 விக்கெட்டுகளையும் ஜடேஜா மற்றும் சேம் கர்ரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் தாகூர் மற்றும் பிராவோ ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 26 ஓட்டங்களையும் 3 விக்கெட்டுகளையும் சாய்த்த மொயின் அலி தெரிவு செய்யப்பட்டார். (4)

# குத்துச்சண்டை போட்டி

## அரை இறுதிக்குள் 4 இந்திய வீராங்கனைகள்

உலக இளையோர் குத்துச் சண்டை சம்பியன்ஷிப் போட்டி போலந்தில் நடந்து வருகிறது. இதில் 60 கிலோ உடல் எடைப்பிரிவில் நடந்த கால் இறுதி ஆட்டம் ஒன்றில் ஆசிய சம்பியனான இந்திய வீராங்கனை வின்கா 5-0 என்ற கணக்கில் கமிலாவை (கொலம்பியா) வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியதுடன் பதக்கத்தையும் உறுதி செய்தார்.

இதே பொல் ஜித்திகா (48 கிலோ) ஆல்பியா பதான் (81 கிலோவுக்கு மேல்), பூனம் (57 கிலோ) ஆகிய இந்திய மங்கைகளும் தங்களது கால் இறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்று குறைந்தது வெண்கலப் பதக்கத்தை உறுதி செய்தனர். மற்றொரு இந்திய வீராங்கனை குஷி(81 கிலோ) துருக்கியின் பஸ்ரா இசில் தாரிடம் தோற்று வெளியேறினார். (4)

# கொரோனா பரவல் எதிரொலி பட்மின்டன் போட்டி தள்ளி வைப்பு


3 கோடி ரூபாய். பரிசுத் தொகைக்கான இந்திய ஓபன் சர்வதேச பட்மின்டன் போட்டி டில்லியில் மே 11 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை ரசிகர்கள் இன்றி நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. டோக்கியோ ஒலிம்பிக்கிற்குரிய தகுதி சுற்றாகவும் இந்த போட்டி அமைந்திருந்ததால் ஒலிம்பிக் உலக சம்பியன் உட்பட உலகம் முழுவதும் 228 வீரர், வீராங்கனைகள் பங்கேற்க தங்களது பெயரை பதிவு செய்திருந்தனர்.

இந்த நிலையில் டில்லியில் கொரோனா பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன், ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டு இருப்பதால் போட்டியை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வதில் சிக்கல் ஏற்பட்டது.

இதையடுத்து பட்மின்டன் சங்க நிர்வாகிகள் டில்லி அரசு அதிகாரிகளுடன் பல கட்டமாக பேச்சு வார்த்தை நடத்தினர்.

இதில் தற்போதைய சூழலில் இந்த போட்டியை தள்ளி வைப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த தகவலை இந்திய பட்மின்டன் சங்க பொதுச் செயலாளர் அஜய் சிங்ஹானியா தெரிவித்தார். (4)

# முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் தில்ஹாராவுக்கு 8 ஆண்டுகள் தடை



ஊழல் குற்றச்சாட்டுக்காக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் தில்ஹாரா லொகுஹெட்டிகேவுக்கு ஐ.சி.சி.யினால் அனைத்து வகையான கிரிக்கெட்டிலும் பங்குகொள்ள எட்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் 2017 ஆம் ஆண்டு விளையாடிய டி-10 போட்டியுடன் தொடர்புடையது. அதனால் தான் ஈ.சி.பி முதலில் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்தது.

இந் நிலையில் இந்த ஆண்டு ஜனவரியில் லொகுஹெட்டிகே குற்றவாளி என்று ஐ.சி.சி. ஊழல் தடுப்பு தீர்ப்பாயம் கண்டறிந்தது.

இலங்கைக்காக 11 வெள்ளை பந்து சர்வதேச போட்டிகளில் விளையாடிய அவர், எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தி 101 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

இறுதியாக அவர் 2016 பெப்ரவரியில் முறை ஸ்போர்ட்ஸ் கிளப்பிற்கான முதல் தர போட்டிகளில் பங்குகொண்டார்.

தற்சமயம் லொகு ஹெட்டிகே அவுஸ் திரேலியாவில் வசித்து வருவதுடன் இலங்கை கிரிக்கெட்டில் அவர் எந்த பதவிகளையும் வகிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# டெஸ்ட் இறுதிப்போட்டி இங்கிலாந்தில் நடைபெறும்

## ஐ.சி.சி.அறிவிப்பு

இங்கிலாந்தில் ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதி போட்டி நடைபெறும் என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் கிரிக்கெட் தொடரின் இறுதி போட்டி இங்கிலாந்தில் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது.

இங்கு பரவும் புதிய வகை கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்திய வீரர்களுக்கு அனுமதி அளிக்கப்படுவதில் சிக்கல் நிலவியது.

இந்த நிலையில் இங்கிலாந்து அரசுடனான பேச்சு வார்த்தைக்கு பின் திட்டமிட்ட படி இந்தியா, நியூசிலாந்து அணிகள் இடையிலான இறுதி போட்டி பாதுகாப்பு வளையத்திற்குள் சவுதாம்டன் நகரில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# 'வடக்கின் போர்'

## ஆரம்ப திகதி அறிவிப்பு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் 'வடக்கின் போர்' என அழைக்கப்படும் 115 ஆவது ஆண்டு இன்னிங்ஸ் துடுப்பாட்ட போட்டி எதிர்வரும் ஜூன் 3,4 மற்றும் 5 ஆம் திகதிகளில் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரென வெளிநாடு சென்ற முருத்தெட்டுவே தேரர்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் கடும் விமர்சனத்தை மேற்கொண்ட அபயராமய விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் திடீரென வெளிநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 10 தேரர்களுடன் அவர் நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு துறைமுகம் 20 ஆவது திருத்தம், போர்ட் சிட்டி என அரசாங்கத்தின் பல்வேறு முயற்சிகளைப் பகிரங்கமாக விமர்சித்து வந்த அவர் அண்மையில் விஜயதாச ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினருடன் அடுத்தடுத்த பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பகலில் மணல் லொறிகளுக்கு தடை!

## புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் அறிவிப்பு

**(கொழும்பு)**

**பகல் நேரங்களில் மணல் கொண்டு செல்வதை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகப் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.**

முதலாம் கட்டத்தின் கீழ் நகர எல்லைக்குட்பட்ட வகையில் கட்டுப்பாடுகளை விதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகப் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அனுர வல்பொல தெரிவித்தார்.

இது தொடர்பிலான இறுதித் தீர்மானம் அடுத்த வாரம் எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மணல் கொண்டு செல்லும் லொறிகளினால் ஏற்படும் அசௌகரியங்கள் மற்றும் வாகன விபத்துகள் என்பவற்றை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-4)

## நிவாட் கப்ராலுக்கு எதிராக மனுத்தாக்கல்



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக தீனியாவல பாலித்த தேரரினால் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

23 பில்லியன் ரூபாவுக்கும் அதிக மக்கள் பணத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியதாகத் தெரிவித்து இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (நி-4)

## துறைமுக நகர மனு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு விசாரணை மீண்டும் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனுக்கள் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் நேற்று இரண்டாவது நாளாக உயர்நீதிமன்றில் இடம்பெற்றது. (நி-4)

## தாய்ப்பால் புரைக்கேறி கைக்குழந்தை உயிரிழப்பு

(திருமலை)

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொற்கேணி பகுதியில் தாய்ப்பால் புரைக்கேறி 25 நாள் கைக்குழந்தை உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த தாய் பிள்ளைக்கு பால் கொடுத்துவிட்டு தூங்கச் செய்து விட்டு பின்னர் இரவு 12 மணியளவில் குழந்தையை பார்த்த போது குழந்தையின் வாய் மற்றும் மூக்குப் பகுதியில் இருந்து நுரை வழிந்த நிலையில் கிடந்ததாகவும் இதனைத் தொடர்ந்து தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து குழந்தை உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (நி-4)

## விஜயதாசவின் மகன் கைது


(கொழும்பு)

ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷவின் மகன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இராஜகிரிய பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவம் தொடர்பிலேயே ஆளுங் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷவின் மகன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார். (நி-4)


# மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்

21.04.2021




## திரு. பரமு குகராஜா

(ஆய்வுகூட உதவியாளர், யாழ்.இந்துக் கல்லூரி)

கனிவு மொழியை குழைவோடு பேசும்
குகராஜா என்னும் குணம் படைத்தோனே - நீர்
மணிவிழாக் காண்பது பணிக்குப் பெருமை
நெருங்கிப் பழகிய எமக்கு ஒவியானீர்

கடமையில் அழியா அழகுடையோனே
பத்தீர் வருடங்களை பகையின்றி வென்றோனே
எப்போதும் நிர்வாகத்துடன் நேரம் தவறா வருகையாய்
ஆய்வு கூடத்தை அனைவரும் விரும்பும்படி
ஆய்ந்தாய்ந்து ஒழுங்கு செய்த அலுவலனே

மும்மொழி உள்ள தேசத்திலே
மூவிரண்டு மொழி பேசும் அறிவுடையோனே
நாம் கேட்கும் உதவிகளை
உடனே செய்திடுவீர் நாளையென்றில்லாமல்.

(6645)

வாழ்த்துவோர்: உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு ஆசிரியர்கள், யாழ். இந்துக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர அனுமதியுங்கள்

## குருமுதல்வர் கோரிக்கை

**(நல்லூர்)**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்த அரசாங்கம் பாதுகாப்பளித்து அனுமதி அளிப்பதை போல கடந்த யுத்தத்தின் போது உயிரிழந்தோரையும் நினைவுகூருவதற்கு இந்த அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எங்களுடைய நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக நடைபெற்ற போரின்போது வடபகுதியில் எத்தனை ஆலயங்கள் குண்டு வீசப்பட்டு தாக்கப்பட்டன. எத்தனையோ மக்கள் இறந்தார்கள். தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். இந்த வேளையிலே தென்பகுதியில் இருந்து யாரும் எங்களுக்காக குரல் கொடுக்கவில்லை. எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு நிச்சயமாக இருக்கின்றது. அது உண்மைதான். இப்படியான ஒரு நிலையில் தென் பகுதியில் நடைபெற்ற ஒரு நிகழ்வுக்கு நாங்கள் ஏன் நினைவு நிகழ்வுகளை செய்ய வேண்டும் என்று ஒரு கேள்வி பலரிடையே நிச்சயமாக இருக்கின்றது.

ஆனால் சரியான ஒரு காரியத்தை ஒருவர் செய்யவில்லை என்பதற்காக சரியான ஒரு காரியத்தை நாங்கள் செய்யாது இருக்கக்கூடாது. ஆண்டவர் இயேசு சொல்லுவார் பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அவற்றை எல்லாம் நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள். அதற்கு ஆதரவாக இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. அதேபோல் அவர்களுடைய துன்ப வேளைகளில் எங்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டியது எங்களுடைய கிறிஸ்தவ மக்களுடைய கடமையாகும்.

ஆகவே இன்றைய தினத்தில் இந்த அஞ்சலி நிகழ்வுகளை நாங்கள் செய்து எங்களுடைய ஆதரவினையும் அஞ்சலிகளையும் செலுத்துவதற்கு முன்வருவோம்.

இந்த வேளையிலே அரசாங்கத்திடம் நாங்கள் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றோம். இந்த உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தோரை நினைவுகூருவதற்கு அனுமதிவழங்கி அதற்கான பாதுகாப்புகளை நீங்கள் கொடுக்கிறீர்கள். அதற்காக நாங்கள் நன்றி சொல்கின்றோம்.

இதேபோல தமிழ் மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் 30 ஆண்டுகளாக அனுபவித்த போரின் பொழுது இறந்து போன ஆயிரக்கணக்கான மக்கள் இறந்துபோன இளைஞர்-யுவதிகளையும் நினைவுகூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்த எங்களுக்கு அனுமதி தர வேண்டும். பாதுகாப்பு தர வேண்டும். அது நாங்கள் செய்ய வேண்டிய ஒரு உணர்வுபூர்வமான நிகழ்வாக இருக்கிறது என்பதையும் இந்த வேளையிலே தெரிவித்து, இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் அதிக கரிசனை எடுத்து அனுமதிகளை விரைவில் வழங்க வேண்டும் என வினயமாக கேட்டுக்கொள்கிறேன்.



ஆகவே அனைத்து மக்களுடன் இணைந்து குறிப்பாக யாழ்.மறைமாவட்ட ஆயர் குருக்கள், துறவிகள் அனைவரும் இணைந்து தாக்குதலில் இறந்து போனவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி செலுத்துவதற்கும் அதேபோல் பாதிக்கப்பட்டிருப்போருக்கும் ஆறுதல் கூறுவோம். எதிர்காலத்திலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது மக்கள் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ இந்த நாட்டிலே சமாதானம் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் எனவும் தெரிவித்தார். (5-4-33)

## ஏழாலையில் திருட்டு பொலிஸில் முறைப்பாடு

(ஏழாலை)

ஏழாலை மேற்கு மயிலங்காட்டுப் பகுதியில் உள்ள கிராம உத்தியோகத்தரின் வீட்டில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டு தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கிராம உத்தியோகத்தர் நேற்று முன்தினம் மதிய உணவிற்காக வீட்டிற்கு வந்தவேளை திருட்டு இடம்பெற்றுள்ளமை தெரிய வந்தது. ஓடு பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் லப்டொப் தொலைபேசி, பணம் என்பன திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-26)



செல்வி பா.சிவாந்தினியின் "ஒற்றைப்பனை" கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை குடத்தனை கரையூர் றோ.க.த.கலவன் பாடசாலை அரங்கத்தில் இடம்பெற்றது. மருதங்கேணி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.செல்வசுகுனா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் கே.பிரபாகர மூர்த்தி கலந்து கொண்டு நூலினை வெளியிட்டு வைத்தார்.

(படம்:- பொற்பதி செய்தியாளர்)

## சந்தைக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வரணி பொதுச் சந்தைக்கு சுற்றுமதில் அமைக்கப்படாமையால் பல்வேறு அசௌகரியங்களுக்கு தாம் முகம் கொடுப்பதாக வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வரணி பொதுச் சந்தையானது யுத்த சூழ்நிலைக்கு முன்பு தென்மராட்சி பகுதியில் முக்கியமானதொரு பிரபல்யமான சந்தையாக விளங்கியதாகவும் ஏனைய இடங்களில் இருந்து வந்து இங்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்தனர்.

பின்னர் நாட்டிலே இடம்பெற்ற இடம்பெயர்வு காரணமாக மக்கள் மீளவும் குடியேறிய பின்னர் வரணி சந்தையானது ஓரளவு புனரமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்ற போதிலும் முன்னர் இருந்ததைப்போல வியாபாரம் இடம்பெறவில்லை என வியாபாரிகள் தெரிவித்தனர்.

அடிப்படை வசதிகளும் திருப்திகரமான முறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனவும் சுற்றுமதில் பூரணமாக அமைக்கப்படாமையால் கால்நடைகள் மற்றும் தெருநாய்கள் போன்றவை படுத்து உறங்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் தினமும் தரையை சுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். வரணி பொதுச் சந்தைக்கு விரைவில் சுற்றுமதிலும் அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தித்தர வேண்டும் என வியாபாரிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-103)

## வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தலைமை அலுவலகத்திலிருந்து யாழ்மாவட்ட செயலக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்கு வரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். இதற்கமைய, புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும், யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்கு வரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் ய.பரந்தாமன் அறிவித்துள்ளார். (5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இலங்கையில் போராடியவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிலிப் குணவர்த்தனவின் 1960-1964 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகள் அடங்கிய புத்தகங்கள் இரண்டை முன்னாள் பிரதி சபாநாயகர் கீதாஞ்ஜன குணவர்த்தன சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் அண்மையில் கையளித்தார்.

# பூநகரி பிரதேச சபை அறிவித்தல்
## பகிரங்க ஏல விற்பனை - 2021

பூநகரி பிரதேச சபையின் 2021.04.19 ஆம் திகதிய சபை அமர்வின் தீர்மானத்திற்கு அமைவாக சபையில் பாவிக்கப்பட்ட வாகனங்களின் 46 ரயர்கள், 28 மின்கலம், 13 பிலாஸ்ரிக் குடிநீர்த் தாங்கி (1000 லீற்றர்) ஆகிய பொருட்கள் 28.04.2021 ஆம் திகதி காலை 09.00 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை ஏலமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இப் பொருட்களை முன்னாங்கீகாரத்தை பெற்று 27.04.2021 ஆம் திகதி பி.ப. 3.00 வரை பார்வையிட முடியும் என்பதுடன் ஏலத்தில் பங்கு பற்றுபவர்கள் உரிய காலத்தில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். நிபந்தனைகள் மற்றும் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு சபையின் செயலாளரிடம் தொடர்பு கொள்ள முடியும் என்பதை அறியத்தருகின்றேன். (தொலைபேசி இலக்கம்: 021 228 4572)

**அருணாசலம் ஐயம்பிள்ளை**
**தவிசாளர், பூநகரி பிரதேச சபை.**

(C-2012)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1975 இந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 56 செவ் 1 சூரி 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, வாகன விற்பனையாளரும், வாகன உதிரிப்பாக கடை
எதிர்பார்ப்பு: வீடு கட்டாயம், அரச, தனியார், சுயதொழில்
தொ.இ: B/225

பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 4 செவ் 11 சூரி 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L, இ.போ.ச. நடத்துநர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு.
தொ.இ: B/240

பிறப்பு: 1976 இந்து நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 20 ½ செவ்.சூரி 11 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி.பணிப்பாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, சைவபோசனம், வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொ.இ: B/251

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 14 செவ் 2 சூரி 3 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, நகைக்கடை (சொந்த கடை)
எதிர்பார்ப்பு: சாதாரண பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/319

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 43 செவ் 4 சூரி 3 இல் உயரம்: 4'11"
தகைமை/தொழில்:. பட்டதாரி அரச ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், இல்லாவிடல் வேறு தொழிலும் ஏற்கப்படும் உள்நாடு மட்டும்
தொ.இ: G/4018

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 38 செவ் 12 சூரி 7 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: CIMA (ACMA,CGMA) BSc, Work Accountant (Private)
எதிர்பார்ப்பு: Doctor,Eng,Bank Accountant, உள்நாடு மட்டும்
தொ.இ: G/4056

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 43 ½ செவ்.சூரி 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில், வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்
தொ.இ: G/4063

பிறப்பு: 1981 உ.கத்தோலிக்கம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும், எழுத்துடன் விவாகரத்து பெற்றவர்
தொ.இ: G/4064

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


PEOPLE'S BANK

# தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.01.2020 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 22.05.2021 (சனிக்கிழமை), 23.05.2021 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | ஏலவிற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | கொக்குவில் மானிப்பாய் | 21.05.2021 | 22.05.2021 (சனிக்கிழமை) 23.05.2021 (ஞாயிற்றுக்கிழமை) யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |
| தெல்லிப்பளை | மல்லாகம் | | |
| | காங்கேசன்துறை | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | -- | | |
| நெல்லியடி | -- | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | -- | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்தி போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**இல: 82, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல: 021 222 2601/021 222 8602**
**தொலை நகல்: 021 222 2602**
**ஈ-மெயில்:** jafrho@peoplesbank.lk

(C-2003)

# ஆதன பெயர் மாற்றம்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 20 இடுகாட்டு வீதி 31 என்னும் இலக்கத்தைக் கொண்ட ஆதனம் அந்தோனிப்பிள்ளை பெண் தங்கமுத்து என்னும் பெயரில் மாநகர சபை ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் இலக்கம் 31 3 ஆம் குறுக்குத்தெரு நாவாந்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி ஜெயராஜ் பற்றீசியா தே.அ.அ.இல, 815624157V என்பவர் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 2019.06.07 ஆம் திகதி 3713 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி தனக்கு சொந்தமானதாக்கியுள்ளார்.

ஆதன விபரம் "வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி வண்ணார் பண்ணை கோவிற் பற்று வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை இது யாழ்ப்பாண பிரதேச செயலகப் பகுதியில் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது. J/85 கிராம அலுவலர் பிரிவில் உள்ள "பாராயடி" நிலப்பரப்பு பூச்சியம் குளி பூச்சியம் மூன்று தசம் ஐந்து ஏழு (நில பர 0 குளி 03.57) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.சந்தியாப்பிள்ளை அவர்களால் 1982.04.24 ம் திகதி 651/1 ம் இலக்கத்தில் அளந்த படத்தில் லொட்1 என காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு 0 குளி 03.57 ஆகும்.

எல்லைகள்:

கிழக்கு - 3ம் குறுக்குத்தெரு
வடக்கு - மரிசல் சிந்தாதுரையின் ஆதனம்
மேற்கு - மரியாம்பிள்ளை செபஸ்ரியின் உரிமைக்காரரின் ஆதனம்
தெற்கு - திபுதியன் பெண் மரியஉத்தரியத்தின் ஆதனம் இதடாங்கலும்,

தற்போது இவ் ஆதனத்தை ஜெயராஜ் பற்றீசியா என்பவர் தனது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடாக எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனம் ஜெயராஜ் பற்றீசியா என்னும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**[illegible] முதல்வர்**
**[illegible] சபை.**

(C-2008)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 51 நாட்களாக சுகாதார தொண்டர்கள் போராட்டம்

(குப்பிழான்)

வடக்கு மாகாண சுகாதாரப் பணி உதவியாளர்கள் கனிஷ்ட தரம்-3 நியமனம் வழங்கப்பட்ட தம்மைப் பணி தொடர அனுமதிக்குமாறு கோரி வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக மேற்கொண்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை 51 ஆவது நாளாகவும் நடைபெற்றது.


ஒரு இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்துக்குள் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களை உள்ளீர்த்து நியமனம் வழங்குமாறு ஜனாதிபதி பணித்திருந்தார்.

எனினும், 20 நாட்களைக் கடந்தும் விடயம் அமுல்படுத்தப்படவில்லை எனப் போராட்டத்தில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (5-4-18)

# முழுமைபெறாத வீட்டுத்திட்டங்கள் சிரமங்களுக்கு மத்தியில் மக்கள்

(கண்டாவளை)

**கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட 686 வீடுகளுக்கான நிதி முழுமையாக வழங்கப்படாத நிலையில் வீட்டுத்திட்ட பயனாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.**



கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மீள்குடியேறியுள்ள குடும்பங்களில் கடந்த 2019 ஆம் ஆண்டு 686 குடும்பங்களுக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கொத்தணி வீடுத் திட்டத்தின் கீழ் 283 வீடுகளும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 403 குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டங்களும் என்ற அடிப்படையில் மேற்படி வீடுத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

இதற்கான முதற்கட்ட கொடுப்பனவுகள் மாத்திரமே வழங்கப்பட்ட நிலையில் அனைத்து வீடுகளின் கட்டுமானப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும் அவற்றை நிறைவேற்றுவதற்கான நிதி வழங்கப்படாத நிலையில் இந்த வீட்டுத் திட்டங்கள் அனைத்தும் இடை நடுவில் கைவிடப்பட்டன.

இதனால் இந்த வீட்டுத் திட்டப் பயனாளிகள், பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழையினால் கூட இவ்வாறான திட்டங்களை பெற்றுக் கொண்ட ஏராளமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-315)

# 150 கிலோ கஞ்சா பள்ளிக்குடாவில் மீட்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பள்ளிக்குடா பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் ஒரு தொகை கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இவை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.மன்னார் வீதிக்கு அண்மித்த பகுதியில் உள்ள பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொதிகளை நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் சுமார் 150 கிலோ எடை கொண்டவை. மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளை விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளுக்காக பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும், மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-5-100-315-316)

# பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் மந்த கதியில் - மக்கள் விசனம்

(அக்கராயன்)

கிளிநொச்சி பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

கடந்த பத்தாண்டுகளாக கிளிநொச்சிக்கு பேருந்து நிலையம் வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை முற்றுப்பெறவில்லை.

பேருந்து நிலைய வேலைகள் நிறைவேறாததன் காரணமாக நூற்றுக்கணக்கான பயணிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

பேருந்து நிலையப் பகுதியில் மலசலகூடங்கள் இல்லாததன் காரணமாக பயணிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலகம், கரைச்சி பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் ஆராயப்பட்டிருந்தாலும் தற்போது வேலைகள் மந்த கதியிலேயே இடம் பெறுகின்றன.

இது தொடர்பாக கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் விரைவான நடவடிக்கையினை எடுத்து கிளிநொச்சி நகரத்தின் பேருந்து நிலையத்தினை விரைவாக அமைத்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பொது மக்களின் வேண்டுகையாகும். (5-4-350)

# வாகனம் செல்ல அனுமதித்ததால் மாணவர்களுக்கு இடையூறு

(நெளுக்குளம்)

பாடசாலை வாசல் வரை வாகனங்கள் செல்வதால் மாணவர்கள் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்குகின்றனர் என பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் இரண்டாம் நுழைவாயில் வரையில் வாகனங்கள் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதால் மாணவர்களுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுவதாக பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்திற்கு இரண்டு பிரதான வாயில்கள் காணப்படுகின்றன. ஆரம்பப்பிரிவுமற்றும் உயர்தர மாணவர்கள் என இரு பிரிவாகச் சென்று வருகின்றனர்.

எனினும் இரண்டாம்வாயிலான கேட்போர் கூடத்தின் பிரதான வாயிலினால் ஆரம்பப்பிரிவு மாணவர்களை அழைத்துச் செல்லும் போது குறித்த வாசல் வரை வாகனங்களில் மாணவர்களை ஏற்றிச் செல்கின்றனர்.

இந்த நடைமுறை முன்னர் நிறுத்தி வைக்கப்பட்டு மாணவர்கள் பிரதான வீதியில் இறக்கிவிடப்பட்டு நடந்து சென்றனர்.

ஆனால் தற்போது அந்த நடைமுறை இல்லை. இதனால் வாகன நெரிசல் ஏற்படுகின்றது.

முன்னர் நடைமுறையிலிருந்த பிரதான வீதியில் மாணவர்களை இறக்கி விட்டு வாசல் வரையும் நடந்து செல்லும் நடைமுறையினை பின்பற்றி மாணவர்களை பாடசாலைக்குள் அனுமதிக்கும் நடைமுறையினை பின்பற்றுவதற்குரிய நடவடிக்கையினை பாடசாலை சமூகம் மற்றும் போக்குவரத்து பொலிஸார் தலையிட்டு நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மேலும் தெரிவித்துள்ளனர். (5-4-299)

## அடிப்படை வசதிகளின்றி அல்லலுறும் இரணைதீவு மக்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைதீவில் மீள்குடியேறி வாழ்ந்து வரும் மீனவக் குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இன்றி பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைதீவுப் பகுதியில் மீள்குடியேறியுள்ள மீனவக் குடும்பங்கள் தாங்கள் பெருமளவான தொழில் முதலீடுகளை செய்து தமது தொழில்களை கடந்த 22 வருடங்களுக்கு பின்னர் ஆரம்பித்துள்ளதாகவும் இப் பகுதியில் மீள்குடியேறிய மீனவக் குடும்பங்கள் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக குடிநீர் வசதி மற்றும் மருத்துவ வசதி, மின்சார வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாத நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த ஆண்டு ஆரம்பத்தில் பல இடங்களில் பொருத்தப்பட்டிருந்த சூரிய மின் விளக்குகள் கூட பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன என்றும் அவற்றைத் திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கோரியுள்ளனர். (5-4-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

21.04.2021
சித்திரை 08, புதன்கிழமை
நவமி முன்னிரவு 7.50 மணிவரை
ஆயில்யம் பின்னிரவு 3.51 மணிவரை
சுபநேரம் 4.31-6.01 மணிவரை
இராகுகாலம் 12.01-1.31 மணிவரை
சந்திராஷ்டமம்-உத்தராடம்
ஸ்ரீராம நவமி

வளவன்


மேஷம்

தொட்ட காரியங்களின் முன்னேற்றம் காண்பீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


ரிஷபம்

உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும்.


மிதுனம்

நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.


கடகம்

இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்கள் பலன் தரும், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


சிம்மம்

மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வேலைச்சுமை சற்று அதிகரிக்கும், விருந்தினர் வருகையால் சுப செலவுகள் கூடும் நாள், சயன சுகக் குறைவான நாள்.


கன்னி

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.


துலாம்

உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம்.


தனுசு

எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மகரம்

சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


கும்பம்

குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.


மீனம்

நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியம் இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, பாராட்டும், புகழும் கூடும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

அறிமுகம் உடையோர் பலராயினும் உற்ற நண்பர் சிலரே வேண்டும்

# 2 ஆம் கட்ட தடுப்பூசி மே முதல் வாரம் ஆரம்பம்

(கொழும்பு)

அஸ்ட்ராஜெனெகா கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளை மே மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தலைமையில் கொவிட் தடுப்பூசி தொடர்பான விசேட நிபுணர்கள் குழு மற்றும் தொற்று நோயியல் பிரிவு உள்ளிட்டவற்றின் பங்குபற்றலுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் வினவிய போது அவர் மேலும் தெரிவிக்கையில், முதற்கட்டமாக அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டவர்களுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் இது தொடர்பில் மீள் பரிசீலனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் விசேட கலயளந் துரையாடல் இடம்பெற்றது. இதனையடுத்தே அடுத்த மாதம் முதல் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

மே மாதம் முதல் வாரத்திலிருந்து அடுத்த 3 வாரங்களுக்கு வழங்குவதற்குத் தேவையான அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன. எனவே அடுத்த மாத இறுதியில் எஞ்சிய தொகை தடுப்பூசிகளை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவித்தார். (நி-4)

## 119 இற்கு போலித்தகவல் வழங்கிய யுவதி கைது

(கொழும்பு)

பொலிஸ் அவசர சேவை இலக்கமான 119 இற்கு தவறான அழைப்பை எடுத்த 25 வயது இளம் யுவதி கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் செய்தித் தொடர்பாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண இதைத் தெரிவித்தார்.

குறித்த யுவதி அழைப்பை எடுத்து தங்கொட்டுவ பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதாக பொய்யாக தெரிவித்தார். இதையடுத்து தங்கொட்டுவ பகுதியில் வசிக்கும் குறித்த யுவதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது மூத்த சகோதரியின் தொலைபேசியைப் பயன்படுத்தி இந்த போலித் தகவலை வழங்கியுள்ளார். (நி-4)

## ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சி




(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மீண்டும் சரிந்தது.

இதன்படி நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 191.97 ரூபாவாக இருந்தது. நேற்று 195.21 ஆக உயர்ந்துள்ளது.

அதேபோன்று நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்விலை 187.93 ஆக இருந்தது. நேற்று 190.29 ஆக உயர்ந்துள்ளது. (நி-4)

## மேதின நிகழ்வை தனியே நடத்த முடிவு

(கொழும்பு)

ஆளுங் கட்சிக்குள் நிலவும் இழுபறி நிலையின் தொடராக மே தினத்தை தனியாக கொண்டாவுள்ளதாக சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது. இது குறித்த அறிவிப்பை முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன நேற்று விடுத்துள்ளார். கொழும்பில் சுதந்திரக் கட்சியின் மேதின நிகழ்வுகள் நடைபெறும் என்றும் அறிவித்தார். (நி-4)

# அடுத்த மூன்று வாரங்கள் முக்கியமானவை சுகாதார நடைமுறைகள் மிக அவசியம்

## என்கிறார் இராணுவத் தளபதி

(கொழும்பு)

அடுத்த மூன்று வாரங்கள் முக்கியமானவை என்பதால் புத்தாண்டு விடுமுறைக்குப் பிறகு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வேலைக்கு வருபவர்கள் அனைவரும் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

முகக்கவசங்களை அணிவது, சமூக தூரத்தை பராமரிப்பது, பணியிடங்களிலும் பொது இடங்களிலும் முறையான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். (நி-4)



# இதுவரை வழங்கப்படாத அனுமதி; உற்பத்தியாளர்கள் பாதிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் பாம் எண்ணெய்க்கு விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக சிற்றுண்டி உற்பத்தியாளர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.


இலங்கை சிற்றுண்டி உற்பத்தி சம்மேளனத்தின் தலைவர் எஸ்.எம்.டி.சூரிய குமார இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் பாம் எண்ணெயை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் இதுவரையில் வழங்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## துரோணரை பிரமிக்க வைத்த அர்ஜுனன்



"சீடர்களே! இன்று நான் ஓர் அரிய வித்தையை உங்களுக்குக் கற்பிக்கப் போகிறேன்! வாருங்கள் காட்டுக்குச் செல்லலாம்' என்றார் துரோணர்.

அனைவரும் துரோணருடன் சென்று ஓர் ஆற்றங்கரையை அடைந்தனர். அனைவரும்அங்கு அமர்ந்ததும்ஆற்று மணலில் ஒரு ஸ்லோகத்தை எழுதினார்.

சீடர்களே! இன்று உங்களுக்குக் கற்பிக்கப் போகும் வித்தையின் மூலமாகஒருகாட்டையே எரித்து விட முடியும். நான் எவ்வாறு இந்த ஸ்லோகத்தை உச்சரித்து அம்பைப் பிரயோகிக்கிறேன் என்று கூர்ந்து கவனியுங்கள்.


"அடடா! அர்ஜுனா கமண்டலத்தை எடுத்து வர மறந்துவிட்டேன் நீ விரைவாக ஆசிரமம் சென்று அதை எடுத்து வா!' என்றார்.

ஏதோ தான் மறந்து வைத்து விட்டதைப் போல காரணம் காட்டி அவனை இலாவகமாக அப்புறப்படுத்தினார்.

குருநாதர் கற்பிக்கப் போகும் இந்த அரிய வித்தையைக்கற்கும்வாய்ப்பு நழுவிவிடுமோ? என்ற கவலையில் ஆசிரமத்தை நோக்கி அர்ஜுனன் விரைந்தான்.

கமண்டலத்துடன் விரைந்து வந்தவன் அவர்கள் ஆற்றைத் தாண்டி செல்வதைக் கண்டு உடனே ஆற்றைக் கடந்து அவர்களிடம் சென்று இணைந்து கொண்டான். கமண்டலத்தைக் குரு நாதரிடம் தந்தான். "குருவே! என்னை மன்னியுங்கள். சற்று தாமதமாகிவிட்டது'. அவனிடமிருந்து கமண்டலத்தைப் பெற்றுக் கொண்ட துரோணர், "நல்லது, சீடர்களே இன்று கற்பித்த வித்தையில் எவருக்காவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்' என்றார். (தொடரும்)

# மகாபாரதம்




போரில்அருச்சுனனை தான் கொல்வேன் என்றான். அசுரர்களும்போரில் தேவர்கள் பாண்டவர்களுக்கு உதவினால் அசுரர்கள் துரியோதனனுக்கு உதவுவதாகக் கூறினர்.

இதனால் துரியோதனன் மனம் மாறி அஸ்தினாபுரம் வந்தான். காட்டில் நடந்தவற்றை அறிந்த பீஷ்மர் துரியோதனனிடம் "இனியும் கர்ணனைப் போன்றோரை நம்பாதே.

தான் தப்பித்தால் போதும் என கந்தர்வப் போரில் உன்னை விட்டு ஓடியவன் அவன். அருச்சுனனே உன்னை வந்து காத்தான்" என்றார். ஆனால் துரியோதனன் அவர் பேச்சை புறக்கணித்தான்.

### கர்ணன் சபதம்

தருமர் முன் செய்த ராஜசூயயாகம் போல ஒரு யாகம் செய்ய விரும்பிய துரியோதனன் அதை கர்ணனிடம் தெரிவித்தான்.

ராஜசூயயாகம்செய்ய ஒரு நிபந்தனை உண்டு. பல நாட்டு மன்னர்களும் அந்த யாகம் செய்பவரது தலைமையை ஏற்க வேண்டும். அதன் படி பல நாடுகளுக்குச் சென்று அம்மன்னர்களை வென்று உன் தலைமையை ஏற்கச் சொல்கிறேன் என துரியோதனனிடம் கூறிவிட்டு கர்ணன் புறப்பட்டான்.

அங்கம், வங்கம், கலிங்கம் ஆகிய நாடுகளை வென்றான். துருபதன், சுகதத்தன் ஆகியோரை அடக்கினான். நான்கு திசைகளிலும் மன்னர்களை வென்றான். வெற்றி வீரனாக திரும்பிய கர்ணனை துரியோ தனன் ஆரத்தழுவி வரவேற்றான். ஆனால் புரோகிதர்கள். ராஜசூய யாகம் செய்ய ஒப்புக் கொள்ள வில்லை.

காரணம் முன்னர் அந்த யாகத்தைச் செய்த தருமர் இன்னமும் இருக்கிறார். அந்த யாகம் செய்த ஒருவர் உயிருடன்இருக்கையில்வேறு ஒருவர் செய்வது மரபல்ல. மேலும் தந்தை திருதராட்டினன் முன் மகன் அதைச் செய்யக் கூடாது என்றும் கூறினர்.

ஆனால் அதற்கு பதிலாக வைஷ்ணவ வேள்வி செய்யலாம் என்றனர். பொன் கலப்பையால் நிலத்தை உழுது இயற்றும் வேள்வி அது.


இவ் வேள்வியில் கலந்து கொள்ள பல மன்னர்களுக்கு அழைப்பு அனுப்பினார்கள். துரியோதனன் பாண்ட வர்களிடமும் தூதுவனை அனுப்பினான்.

பதின்மூன்று ஆண்டுகள் முடிந்த பின்னரே அஸ்தினாபுரம் திரும்புவோம் எனத் தூதுவனிடம் தருமர் உரைத்தார். ஆனால் பீமனோ "எங்கள் வனவாசம் முடிந்ததும் நாங்கள் செய்யும் வேள்வியில் துரியோதனன்முதலானோர் ஆஹூதி (வேள்விப் பொருள்) களாகப் பயன்படுவார்கள்" என்றான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றுநோயை சில மாதங்களில் கட்டுப்படுத்தலாம்

# மகிழ்ச்சித் தகவலை கூறும் உலக சுகாதார அமைப்பு




**(ஜெனிவா)**

**தற்போது கிடைக்கக்கூடிய வளங்களை உலகம் முழுவதும் நியாயமான முறையில் பகிர்ந்து கொண்டால் அடுத்துவரும் மாதங்களில் உலகெங்கும் கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்தார்.**

ஜெனிவாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தடுப்பூசி தேசியவாதம் ஒரு மோசமான சுயநலவாத செயற்பாடு என இதன்போது கெப்ரேயஸ் கூறினார். வளரும் நாடுகளில் அதிகம் பாதிக்கப்படக்கூடிய தரப்பினருக்கு தடுப்பூசி இல்லாமல் திண்டாடும் நிலையில் பணக்கார நாடுகள் தங்கள் இளைய குடிமக்களுக்கு தடுப்பூசியில் முன்னுரிமை அளிப்பது நியாயமற்றது எனவும் அவர் தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்று நோயை சில மாதங்களில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான வளங்கள் எங்களிடம் உள்ளன.

ஆனால் அவற்றை தொடர்ச்சியாக வும் சமமாகவும் பகிர்ந்து பயன்படுத்தும் போதே தொற்று நோயைக் கட்டுப்படுத்துவது சாத்தியம் எனவும் உலக சுகாதார அமைப்பின் தலை வர் தெரிவித்தார்.

எனினும் உலகெங்கும் 25 முதல் 59 வயதிற்குட்பட்டவர்களிடையே ஆபத்தான வகையில் கொரோனா பரவல் அதிகரித்து வருவது குறித்து அவர் கவலை தெரிவித்ததுடன் கொரோனா வைரஸின் புதிய பிறழ்வுகள் இதற்குக் காரணமாக இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உலகம் முழுவதும் இந்தத் தொற்று நோயால் ஒரு மில்லியன் இறப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது.

கொரோனா இறப்புக்கள் 2 மில்லியனை அடைய 4 மாதங்கள் ஆயின.

இப் போது 3 மாதங்களில் ஒரு மில்லியன் இறப்புக்கள் பதிவாகியுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-4-8)

## மன்மோகன் சிங்கிற்கு கொரோனா



(டில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் டில்லியில் உள்ள எய்ம்ஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு காய்ச்சல் அறிகுறி இருந்ததையடுத்து கொவிட் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதால் தற்போது அவர் சிகிச்சை பெற்று வருகின்றார். (நி-4-8)

## நைஜீரியாவில் கோர விபத்து; எண்ணெய் டாங்கர் வெடித்துச் சிதறியது

### ❖12 பேர் பலி

(அபுஜா)

நைஜீரியாவில் எண்ணெய் டாங்கர் லொறியில் தீ பிடித்து வெடித்துச் சிதறியதில் தீயின் கோரப்பிடியில் சிக்கி ஒரு பச்சிளம் குழந்தை, 3 பெண்கள் உட்பட 12 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள பெனூ மாகாணத்தில் கச்சா எண்ணெயை ஏற்றிக் கொண்டு டாங்கர் லொறி ஒன்று சென்று கொண்டிருந்தது.

வீதியில் தறிகெட்டு ஓடிய லொறி கிராமத்துக்குள் புகுந்து கவிழ்ந்தது. இதில் லொறியில் இருந்த எண்ணெய் முழுவதும் தரையில் கொட்டியது. இதனால் டாங்கர் லொறியில் தீ பிடித்து வெடித்துச் சிதறியது.



இந்த தீ அருகில் உள்ள வீடுகளிலும் கடைகளிலும் பரவி கொழுந்துவிட்டு எரிந்தது. இதில் வீடுகள் மற்றும் கடைகளில் இருந்த பலர் தீயில் சிக்கினர்.

இந்த கோரச் சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் தீயணைப்பு வீரர்கள் தீயணைப்பு வாகனங்களில் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

இந்த விபத்துக்கான காரணம் பற்றி தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4-8)

## அமெரிக்க முன்னாள் துணை ஜனாதிபதி காலமானார்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் துணை ஜனாதிபதி வால்டர் மண்டிலி (வயது 93) நேற்று உயிரிழந்தார். வால்டர் மண்டிலி வயது முதிர்வு காரணமாக உயிரிழந்துள்ளார்.

முன்னாள் துணை ஜனாதிபதி வால்டர் மண்டிலி உயிரிழந்துள்ள சம்பவத்திற்கு அவருடன் இணைந்து பணியாற்றிய முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

மேலும், வால்டர் மண்டிலி மறைவுக்கு முன்னாள் ஜனாதிபதி ஒபாமா, தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். (நி-4-8)

## செவ்வாய்க்கிரகத்தில் வெற்றிகரமாக உலங்குவானூர்தியை செலுத்தியது நாசா

(வோஷிங்டன்)

செவ்வாய்க்கிரகத்தின் மீது சிறிய ரக உலங்குவானூர்தி ஒன்றை நேற்று முன்தினம் வெற்றிகரமாக பறக்க விட்டுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது. வேற்றுக்கிரகம் ஒன்றில் முதல் முறையாக உலங்குவானூர்தி செலுத்தப்பட்ட சந்தர்ப்பமாக இந்நிகழ்வு வரலாற்றில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இன்ஜெனுயிட்டி என பெயரிடப்பட்டுள்ள இந்த உலங்குவானூர்தி ஒரு ட்ரோனை போன்ற தோற்றத்தை கொண்டதாகும்.

இந்த உலங்குவானூர்தி வெற்றிகரமாக செலுத்தப்பட்டமை, செவ்வாய்க் கிரகத்துக்கு மேலாகவுள்ள செயற்கைக்கோள் ஒன்றினால் அனுப்பப்பட்ட தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதாக நாசா தெரிவித்துள்ளது. (நி-4-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-3046 224**

**தொற்று :-142 811 450**

**(நேற்றைய நிலவரம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நரி மிரட்டி/ கிலுகிலுப்பை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name: Crotalaria verrucosa**
**Family: Fabaceae**
**Sinh:Nil- andanahiriya**

தரிசு நிலங்களில் தானே வளரக்கூடியது. நிறையக் கிளைகளைக் கொண்ட பெரிய செடி இனத்தைச் சேர்ந்தது.

இதில் வெள்ளை, ஊதா, மஞ்சள், சிவப்பு நிறப் பூக்களைக் கொண்ட நான்கு வகை கிலுகிலுப்பை உண்டு. இலைகள் மாற்றிலை அடுக்கம் கொண்டவை. வருடம் முழுவதும் பூக்களைக் காணலாம்.

காட்டுக்குள் இதன் பரம்பல் அதிகம். இதன் காய்கள் காற்றில் ஆடும் போது அல்லது விலங்குகள் உரசும் போது கலகலப்பான சத்தத்தைக் கேட்டு நரிகள் மிரண்டு ஓடுவதால் நரிமிரட்டி என்ற பெயர்.

அவரை வடிவக் காய்களைக் கொண்டது. ஒவ்வொரு கனிகளிலும் 12 விதைகள் இருக்கும். கோள வடிவினதாக இருக்கும். வருடம் முழுவதும் பூக்கக்கூடியது.

கிலுகிலுப்பையானது பொதுவாக, சொறி, சிரங்கு, வயிற்றுப்புண், கப நோய்கள், காய்ச்சல், கண்டமாலை போன்றவற்றை நீக்கும். இதன் இலைகள் தண்டு, காய்கள் அனைத்தும் மருத்துவப் பண்புகள் நிறைந்தன. இதற்கு கைப்பு, துவர்ப்புச் சுவைகள் உண்டு.

**வட்டக் கிலுகிலுப்பை**
**மாறச் சொறி கிரந்தி**
**துட்டகண்ட மாலைபல**
**சோபைநோய்- வட்டமுலை**
**மானே விரணவகை**
**மாந்தமுத னேயெல்லாந்**
**தானேய கற்றுமெனச்**
**சாற்று**

கிலுகிலுப்பைச்செடி சினைப்பு, சிரங்கு, கண்டமாலை, பற்பல வீக்கம், விரணங்கள், அக்னி மாந்தம், வயிற்றுப்பொருமல், பசியின்மை இவற்றை நீக்கும்.

ஆனாலும் கிலுகிலுப்பையானது வாந்தியை உண்டு பண்ணக்கூடியது.

உட்பிரயோகமாகவும் வெளிப்பிரயோகமாகவும் பயன்படுத்தலாம்.

வாந்தி உண்டாக்கும் தன்மையினால் உட்பிரயோகமாக பயன்படுத்தும் போது வைத்திய ஆலோசனை பெற்று பயன்படுத்துதல் சிறந்தது.

கிலுகிலுப்பையின் வேர்களைச் சேகரித்து நன்கு கழுவி 5 கிராம் அளவு எடுத்து அதற்கு சம எடை சுக்கு (வேர்க்கொம்பு), மிளகு, திப்பிலி சேர்த்து 8 பங்கு நீர் விட்டு 1/8 பங்காக சுண்டக்காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை 5 நாட்கள் தொடர்ந்து எடுக்க வாதவலி குணமாகும். கபத்தால் ஏற்படும்

தவிர்க்க வேண்டும்.

இதன் இலைகளைச் சேகரித்து நன்கு கழுவி சிறுசிறு துண்டுகளாக வெட்டி மண் சட்டியில் இட்டு 8 பங்கு நீர் விட்டு 1/8 ஆக சுண்டக்காய்ச்சி10 மில்லி அளவு காலை, மாலை குடிக்க கோழை (கபம்) இனால் ஏற்பட்ட காய்ச்சல் தணியும்.

ஆனாலும் இதன் இலைகள் சேர்ந்த குடிநீரை குழந்தைகளும் கர்ப்பிணித்தாய்மாரும் பயன்படுத்தலைத் தவிர்க்க வேண்டும்.

கிலுகிலுப்பையின் விதைகளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. இதனை வெளிப்பிரயோகமாகவே

எனும்போது மிருகங்களின் வாய்களைக் கட்டுதல் எனவும் கூறப்படும்.

போகர் 7000 நூலில் மிருகவசியத்தில் கிலுகிலுப்பை பற்றி போகர் தெளிவாகக் கூறியுள்ளார்.

கேரளப் பிரதேசத்தில் மாந்திரிகத்தில் முக்கியமாக இன்றும் பயன்படுத்தப்படுகிறது. இதன் இலைகளை அவித்த நீரில் நீராடிவர தலைவலி தணியும்.

கிலுகிலுப்பை உமிழ்நீர் பெருக்கத்தைக் குறைக்கும். இதற்கு இலைகளை குடிநீரிட்டு வாய் கொப்பளித்துவர உமிழ்நீர் அதிகளவு சுரப்பதைக் கட்டுப்படுத்தும்.



வெள்ளை கிலுகிலுப்பை



ஊதா கிலுகிலுப்பை



மஞ்சள் கிலுகிலுப்பை



கிலுகிலுப்பை



ஏழிலை கிலுகிலுப்பை

காய்ச்சலுக்கும் இக்குடிநீரைப் பயன்படுத்தலாம்.

கிலுகிலுப்பையின் இலைகளை சேகரித்து உப்புத் தண்ணீரில் கழுவி பின்பு நல்ல தண்ணீரிலும் கழுவி மஞ்சள் தூள் சேர்த்து மைபோல அரைத்து பூச வியர்க்குரு, சிரங்கு, சொறி போன்றன நீங்கும். இதனைப் பயன்படுத்தும்போது சவர்க்காரம் பயன்படுத்தலை

பயன்படுத்த வேண்டும். விதைகளுக்கு குடலில் நமைச்சலை ஏற்படுத்தும் தன்மை உண்டு.

மிருகவசியத்திற்கு கிலுகிலுப்பை மூலிகை பயன்படுத்தப்படுகிறது. அதிலும் ஊதா நிற கிலுகிலுப்பை மூலியே பயன்படுத்தப்படுகிறது.

இதனை [illegible]

### கிலுகிலுப்பை எண்ணெய்

கிலுகிலுப்பை இலைச்சாறு-750 மில்லி, தேங்காய் எண்ணெய்-750 மில்லி, கருஞ்சீரகம்-25 கிராம், அதிமதுரம்-25 கிராம், கிச்சிலிக்கிழங்கு- 25 கிராம்.

கருஞ்சீரகம், அதிமதுரம், கிச்சிலிக்கிழங்கு ஆகியவற்றை பச்சைப் பசுப்பாலில் அரைத்து இலைச்சாறு, எண்ணெயில் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து ஆறவிட்டு சிரங்கு, சொறி, கரப்பான் போன்றவற்றிற்குப் பூச அவை மாறும்.

வசிய மூலிகைகளுள் முக்கியமான ஒரு மூலிகையாகும். ஊதா, சிவப்பு, வெள்ளை, மஞ்சள் நிறப் பூக்களாக வித்தியாசப்படும். இலைகளின் அமைப்பும் வேறுபட்டுக் காணப்படும். ஆனால் காய்கள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கும்.

மூட்டுக்களில் வலி, வீக்கம் இருந்தால் இதன் இலைகளையும் மஞ்சளையும் சேர்த்து அரைத்து வலி, வீக்கமுள்ள இடத்தில் பத்து **(Poultice)** போல் கட்டிவிடலாம்.

இதன் குடிநீரை உட்பிரயோகமாக எடுக்கும் போது குறைந்த அளவில் பனங்கற்கண்டு அல்லது கல்லாக்காரத்துடன் சேர்த்து எடுக்கும்போது குமட்டல் தன்மை குறைவாக இருக்கும். கிலுகிலுப்பையில் ஏழிலை, கிலுகிலுப்பை என்ற ஓர் இனமும் உண்டு. இதன்

**Botanical Name: Crotalaria grahamiana.**

இம்மூலிகை பொதுவாக கடல் மட்டத்திலிருந்து 7000 .அடி உயரமான மலைப் பகுதியில் தேயிலைத் தோட்டக் கரைகளில் தானாக வளரக்கூடியது. கிட்டத்தட்ட 5 அடி உயரம் வரை வளரும். புதர்ச்செடி போல் வளரும். மஞ்சள் நிறப்பூக்களைக் கொண்டது.

7 பிளவைக் கொண்ட இலைகள். ஆனால் இது ஓர் நச்சுத்தன்மையைக் கொண்ட புதர்ச்செடியாகும். குடலில் நமைச்சலை ஏற்படுத்தக்கூடிய நச்சு வகையாகும். ஆனால் இலங்கையில் மலைநாடுகளில்தான் பரம்பிக் காணப்படும்.

வடமாகாணத்தில் ஏழிலை கிலுகிலுப்பையின் பரம்பல் இதுவரை அவதானிக்கப்படவில்லை.

எனவே கிலுகிலுப்பை இன மூலி கைகளை சரியான முறையில் இனங்கண்டு கொள்ளல் அவசியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை முகவராக செயற்படுவதை பேராயர் உடன் நிறுத்த வேண்டும்

## ஞானசார தேரர் அறிவுரை

(கொழும்பு)

இரட்டை முகவராக செயற்படுவதை கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.





நுவரெலியா அமோகராம விகாரையில் வைத்து செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இஸ்லாமிய அடிப்படைவாதம் உலகளாவிய ரீதியில் வியாபித்துள்ளது. அறவழி மத கொள்கைக்கு அப்பாற்பட்டவர்கள் இஸ்லாமிய மத கொள்கையினை தவறான வகையில் புரிந்துகொண்டு அடிப்படைவாத செயற்பாடுகளில் ஈடுபட்டு ஏனைய மதங்கள் மீது வேறு தாக்குதல்களை முன்னெடுக்கிறார்கள்.

இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் அரச ஆதரவுடன் தலைத்தூக்குகிறது என்பதை ஆரம்ப காலத்தில் இருந்து ஆதாரத்துடன் தெரிவித்தோம். எமது கருத்தை யாரும் பொருட்ப்படுத்தவில்லை .

இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து நாங்கள் குறிப்பிட்ட கருத்தை முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தி எங்களை இனவாதிகளாக சித்தரித்து அரசியல் இலாபம் தேடிக் கொண்டார்கள்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தினால் எதிர்காலத்தில் தோற்றம் பெறும் பாரதூரமான விளைவுகள் குறித்து எவரும் அக்கறை கொள்ளவில்லை. அனைத்து தரப்பினரது கவனயீனத்தையும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது.

குண்டுத் தாக்குதலில் அப்பாவி மக்கள் மாத்திரமே பலியானார்கள். ஐ.எஸ்.ஐ.எஸ் கொள்கையினால் ஈர்க்கப்பட்டவர்கள் தாக்குதல்களை முன்னெடுத்தார்கள் என்று மல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை ஆரம்பத்தில் குறிப்பிட்டார். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்று நாளையுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகுகின்றன.

இவ்வாறான நிலையில் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் மத கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது அல்ல அத் தாக்குதல் அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டது என மல்கம் ரஞ்சித் கர்தினால் குறிப்பிட்டுள்ளமையை வன்மையாக கண்டிக்கிறோம்.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் மீது உள்ள பிரச்சினைகளை அவர் தனிப்பட்ட முறையில் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் விவகாரத்தை ஒரு கருவியாக பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ் விடயத்தில் இரட்டை முகவராக செயற்படுகிறார் என தேரர் தெரி வித்தார். (நி-4)

# அதிகரிக்கும் வீதி விபத்துக்கள்

# 7 நாட்களில் 69 பேர் பலி

(கொழும்பு)

நாடு முழுவதும் 7 நாட்களில் பதிவான வீதி விபத்துக்கள் காரணமாக 69 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் 13 காலை 6 மணி தொடக்கம் நேற்று காலை 6 மணிவரையான காலப்பகுதியில் பதிவான விபத்துக்கள் காரணமாகவே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

முன்னதாக வீதி விபத்துக்கள் காரணமாக அன்றாடம் 6 அல்லது 7 பேர் உயிரிழந்துள்ளதாக பதிவாகியுள்ள நிலையில் தற்சமயம் அந்த எண்ணிக்கை 9 முதல் 10 ஆக உயர்வடைந்துள்ளது.

இது இவ்வாறு தொடருமானால் ஆண்டொன்றுக்கு 3,650 பேர் வீதி விபத்துக்கள் காரணமாக உயிரிழக்கும் நிலை ஏற்படும் என்றும் பொலிஸார் எச்சரிக்கை வெளியிட்டுள்ளனர்.

எனவே வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண வலியுறுத்தியுள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஒரு புத்திமதி!

ஒரு மன்னன் தன் அமைச்சரை அழைத்துக் கொண்டு காட்டுக்குப் போனான். அங்கே ஒரு முனிவர் இருந்தார். அவர் முன்னால் போய் நின்றான்.

சுவாமி என்னை ஆசீர்வாதம் செய்யுங்கள். எனக்கு ஏதாவது புத்திமதி சொல்லுங்கள் என்றான். அவர் ஆசீர்வாதம் செய்தார். அதற்குப்பின்பு சொன்னார். மகனே நீ எந்தக் காரியத்தைச் செய்தாலும் செய்வதற்கு முன்னால் ஒரு தடவை அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை நன்றாக யோசிக்க வேண்டும். உன் மனதுக்கு அது சரி என்று தெரிந்தால் மட்டும் அதைச் செய்ய வேண்டும் என்றார்.

அரசன் அவர் சொன்னதை அப்படியே மனதிலே வாங்கிக் கொண்டான். அவர் காலடியிலே விழுந்து வணங்கினான். நூறு பொற்காசுகளை அவர் காலடியிலே வைத்துவிட்டுத் திரும்பினான். அமைச்சர் இதைக் கவனித்தார்.

என்ன இது நம்ம அரசர் இவ்வளவு ஏமாளியாக இருக்கின்றாரே? இந்த ஒரு சாதாரண யோசனை சொன்னதற்கு நூறு பொற்காசுகள் கொடுத்துவிட்டாரே என்று நினைத்தார். அமைச்சர் இப்படி நினைக்கிறது அவர் முகத்தைப் பார்த்ததுமே அரசனுக்குப் புரிந்துவிட்டது இருந்தாலும் அதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை.

இரண்டு பேரும் திரும்பி அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். அதற்குப் பின்பு அந்த அரசன் என்ன செய்தார் தெரியுமா? காட்டிலே முனிவர் சொன்ன அந்த புத்திமதியை ஒரு கல்லிலே கல்வெட்டாக செதுக்கினான். தன்னுடைய அறையில் எல்லோர் கண்ணிலும் படும்படியாக அதை பதித்து வைத்துக் கொண்டான். இப்பொழுதும் அந்த அமைச்சருக்கு ஆச்சரியம்.

என்ன இது.. எங்கள் மன்னருடைய அறியாமையைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இதைப்போய் கல்லிலே செதுக்கி வைக்க வேண்டுமா? என்று நினைத்துக் கொண்டார்.

கொஞ்ச நாள் ஆகிவிட்டது. ஒரு நாள் அந்த மன்னருக்குக் கடுமையான வயிற்றுவலி. உடனே அரண்மனை வைத்தியரைக் கூப்பிட்டார். அவர் வந்து சேர்ந்தார் மன்னரை சோதித்துப் பார்த்தார். கொஞ்ச நேரம் இப்படியே படுத்திருங்கள் நான் எங்கள் வீட்டுக்குப் போய் இதற்குப் பொருத்தமாக ஒரு மருந்து தயார் செய்து கொண்டு வருகின்றேன் என்று ஓடினார்.

மருந்தோடு திரும்பி அவர் வந்த சமயத்திலே மன்னர் ஒரு கட்டிலிலே கண்மூடி படுத்திருந்தார். பக்கத்திலே யாரும் இல்லை. வைத்தியர் வந்தார். ஒரு சின்ன கோப்பையில் கொஞ்சம் மருந்தை ஊற்றினார். சுற்றும் முற்றும் பார்த்தார். ஏதோ ஒரு பொடியை அதிலே கலந்தார். கலந்து எடுத்துக் கொண்டு மன்னரை நெருங்கினார். கொஞ்சம் யோசித்தார். பிறகு திரும்பிப் போனார். கையிலிருந்த மருந்தை கீழே கொட்டிவிட்டு வந்தார். அந்தக் கோப்பையை நன்றாக சுத்தம் செய்துவிட்டு மறுபடியும் கொஞ்சம் மருந்தை ஊற்றிக் கொண்டு வந்தார்.

மன்னா என்று மெதுவாக கூப்பிட்டார். அவர் எழுந்து கொண்டார். வைத்தியரே நான் கண்களை மூடிக் கொண்டு இருந்தாலும் அவ்வப்போது கவனித்துக் கொண்டு தான் இருந்தேன்.

முதலிலே எதையோ கலந்தீர்கள். பின்பு அதைக் கொட்டிவிட்டு வேறு கொண்டுவந்தீர்கள் என்ன விடயம்? உண்மையைச் சொல்லுங்கள் என்று மிரட்டினார்.

வைத்தியர் மிரண்டு போய்விட்டார். அப்படியே பொத்தென்று மன்னரின் காலில் விழுந்தார். உண்மையைச் சொன்னார். மகாராஜா... உங்களுடைய படைத்தளபதி உங்களைக் கொல்ல சதி செய்தார். விசம் கலந்து கொடுக்கும்படியாக சொன்னார். வெகுமதி நிறைய தருகின்றேன் என்றார். நானும் சரி என்று சொல்லிவிட்டு இங்கே வந்தேன்.

அவர் கொடுத்த விஷப் பொடியை மருந்திலே கலந்தேன்.. எடுத்துக் கொண்டு உங்களிடம் வந்த பொழுது எதிரிலே நீங்கள் வைத்திருக்கின்ற கல்வெட்டு வாசகம் கண்ணிலே பட்டது.

எந்தக் காரியத்தை செய்தாலும் அதனுடைய விளைவுகளைப் பற்றி யோசிக்கச் சொல்லியது அந்த வாசகம். யோசித்தேன்.. என் உயிருக்கே ஆபத்து என்பதைப் புரிந்து கொண்டேன். உடனே திரும்பிப் போய் அதைக் கொட்டி கழுவிவிட்டு வேறு மருந்து ஊற்றிக் கொண்டு வருகின்றேன் என்றார்.

இப்போது அந்த மன்னர் அமைச்சரைக் கூப்பிட்டார். பார்த்தீர்களா? இந்த புத்திமதியை அன்றைக்கு நீங்கள் அலட்சியமாக நினைத்தீர்கள். இன்றைக்கு அது தான் என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது என்றார். அமைச்சர் தலையைக் குனிந்து கொண்டார். அதனால் பெரியவர்கள் நமக்குச் சொல்கின்ற புத்திமதி சாதாரணமாகத்தான் தெரியும்.

அதற்காக நாம் அதை அலட்சியம் செய்து விடக் கூடாது. இந்தக் காலத்திலே ஒருத்தன். ஒரு சாமியாரிடம் போனான். ஒரு ஆயிரம் ரூபாயை அவர் காலடியில் வைத்துவிட்டுத் திரும்பி வந்தான்.

எதற்கு..அது? என்று கேட்டேன். இன்றைக்கு நான் இந்த அளவுக்கு நல்லபடியாக இருப்பதற்கு அவர்தான் காரணம். ஏற்கனவே ஒரு தடவை இவரிடம் வந்து புத்தி சொல்லுங்கள் என்று கேட்டேன். மாட்டேன் என்றுவிட்டார்.

அன்றைக்கு அவர் ஏதாவது எனக்கு புத்தி சொல்லி நான் அதன்படி நடந்திருந்தேன் என்றால் இன்றைக்கு நான் வீணாகிப்போயிருப்பேன். அதற்காக நன்றியை தெரிவிக்கத் தான் இன்றைக்கு வந்தேன் என்று சொல்லிவிட்டு தெருவிலே இறங்கி நடந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 19 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.





**எரிக்கப்பட்டுக்கிடக்கும் நூலகத்திற்குப் பதிலாக அதன் சிறுபகுதிகளை மாநகர சபைக் கட்டத்தில் மேயர் இராஜா விஸ்வநாதன் தற்காலிகமாக திறந்து வைத்தல்**

◆யாழ். நூல் நிலையத்துக்கு பொலிஸாரே தீ வைத்தனர் என காவலாளிகள் கூறினர் -மாநகர ஆணையாளர்.

◆பொலிஸார் தான் தீ வைத்தனர். இப்படித் தாம் கருதுவதாக யாழ் மாநகர ஆணையாளர் சாட்சியம்.

22.06.1981

◆தமிழ்த் தேசிய இனத்தைப் பாதுகாக்க அரசு தவறிவிட்டது ஆயுதப்படையினர் வாபஸ் பெற வேண்டும் - தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு தீர்மானம்.

24.06.1981

◆எங்களைக் கண்டதும் பொலிஸார் மதில் ஏறிக்குதித்து அப்பால் சென்றனர் - யாழ். பொதுநூல் நிலையக் காவலாளி பொலிஸ் விசாரணையில் தகவல்.

◆ ஜூலை 3 முதல் யாழ். தற்காலிக நூலகம்- மாநகர சபைக் கட்டட கீழ்த்தளத்தில் இயங்கும்.

6.7.1981

◆ அணு குண்டைவிட ஆத்மீகசக்திக்குஅதிகவலிமை உண்டு - வவுனியா உண்ணாவிரதத்தில் சாவகச்சேரி எம்.பி.

8.7.1981

◆ யாழ்நூலக எரிப்பு பற்றி எனக்கும் கவலை உண்டு. ஆனால் கண்டிக்கும் நிலையில் இல்லை. அமைச்சர்என்பதால் அரசின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டிருக்கிறேன் என்கிறார் அமைச்சர் K.W.தேவநாயகம்

12.7.1981

◆யாழ்நூலகபுனரமைப்பு நிதிக்கு தாராளமாக உதவுங்கள் - மகாநாயக்க தேரர்கள், அதி மேற்றிராணிமார் மற்றும் பிரமுகர்கள் வேண்டுகோள்.

17.7.1981

◆யாழ். வன் செயல்களுக்குப் பொறுப்பானவர்கள்கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் - கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா.

12.10.1981

◆ஈழத்தமிழருக்கு எப்படி உதவலாம் என்பது பற்றிமுடிவு செய்ய அனைத்துக்கட்சி மகா நாடு தமிழக முதல்வர் கூட்டுகிறார். யாழ். நூலகத்துக்கு நூல்கள் வழங்க எம்.ஜி. ஆர் ஏற்பாடு.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதித்து சாத்தியமான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு அனைத்துக் கட்சிகளின் மகாநாடு ஒன்றை தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் இம்மாதம் பதினெட்டாம் திகதி சென்னையில் கூட்டுகின்றார்.

இலங்கைத் தமிழர்களின் இன்னல்களை துடைப்பதற்காக தமிழக மக்கள் மேற்[illegible] கைகள் பற்றி [illegible]காகவே அனைத்துக் கட்சிகளின் மகாநாட்டை இம்மாதம் பதினெட்டாம் திகதி தாம் கூட்டுவதாக தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இம் மகாநாடு தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதே நேரத்தில் கடந்த மே மாதம் 31ஆம் திகதி முதல் யூன் மாதம் 3ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்களின்போது யூன் மாதம் முதலாம் திகதி தீக்கிரையாக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொதுசன நூல் நிலையத்திற்கு பல அரிய நூல்களை அன்பளிப்பாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளிலும் முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் ஈடுபட்டுள்ளார்.

இதன் பொருட்டு தம்மிடமுள்ள நூல்களில் ஒரு பிரதியையேனும் தமிழ்நாடு கல்வித்துறை செயலாளருக்குஅனுப்பி வைக்கும்படி தமிழ்நாடு கல்விமான்களையும் எழுத்தாளர்களையும் முதலமைச்சர் எம். ஜி. ராமசந்திரன் கேட்டுள்ளார்.

இம்மாதம் 18ஆம் திகதி நடைபெறும் அனைத்துக் கட்சிகள் மகாநாட்டில் இன்னலுக்குள்ளான இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக மக்கள் எத்தகைய விதத்தில் உதவலாம் என்பதுபற்றி தீர்க்கமாக ஆலோசித்து முடிவு எடுக்கப்படுவதுடன் வன்செயலின் போது எரிக்கப்பட்ட யாழ் பொதுசன நூலகத்திற்கு அரிய நூல்களை இந்திய மத்திய அரசின் வாயிலாக கையளிப்பது குறித்தும் தீர்மானிக்கப்படும் என்றும் தமிழக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

15.10.1981

◆யாழ் மக்களின் கவலையில் நானும் பங்கெடுக்கின்றேன் - யாழ்நகரில் சர்வோதயத்தின் ஸ்தாபகரும் தலைவருமான கலாநிதி ஏ. ரி.ஆரியரத்னா

8.11.1981

◆பொதுசனநூலகத்துக்கு 1 1/2இலட்சம் ரூபாய் நூல்கள் யாழ் கிறீஸ்தவ ஐக்கிய சங்கம் வழங்கும்.

13.12.1981

◆யாழ் பொதுசன நூலக புனரமைப்பு யாழ்பல்கலைக்கழக மாணவர்கள்இன்றும் நாளையும் வீடுகளில் நிதி திரட்டுவர்.

21.12.1981

◆ யாழ்பொதுசனநூலகநிதி - பல்கலைக்கழக மாணவர்கள் ரூபாய் [illegible]9,965 சேர்த்தனர்

23.12.1981

◆ யாழ் நூலக கட்டட நிதிக்கு வரி விலக்குக் கோருகிறார் மன்னார் எம்.பி பி.எஸ்.சூசைதாசன்.

### யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையத்தை மீள்விப்பதற்கான திட்டம்

யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையத்தை மீள்விப்பதற்கான திட்டம்என்ற தலைப்புடன் கீழ் கண்ட முன்னுரையுடன் யாழ் மாநகரசபை முதல்வர் இராசா விஸ்வநாதன் வேண்டுகோளுடனும் நூலகத்தின் மாதிரி வரைபடங்களையும் எரியுண்ட நூலகப் பகுதிகளின் புகைப்படங்களையும் உள்ளடக்கியதாக தமிழ் ஆங்கில மொழிகளில் பதினைந்து பக்கங்களில் சிறு பிரசுரம் ஒன்று 1981 இல் வெளியிடப்பட்டது.

### பொதுசன நூல் நிலையத்திற்கான மாநகர முதல்வரின் வேண்டுகோள்

97ஆயிரம் புத்தகங்களையும் கிடைத்தற்குரிய கையெழுத்துப் பிரதிகளையும் கொண்ட மகத்துவம் மிக்க கட்டடமான யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையத்துக்கு மனம் போனவாறாக நிகழ்த்தப்பட்ட அழிவே ஒருகால் இத்தீவின் வரலாற்றில் இடம்பெற்ற மிகுந்த அவ மானத்துக்குரிய சோக நிகழ்வாக விருக்கலாம்.


யூன் முதல் வாரத்தின்போது நகரத்தை எரியூட்டுதலுக்கும், தாக்குதலுக்கும் உட்படுத்திய சட்டத்தினதும் ஒழுங்கினதும் பாதுகாவலர்களால் அது எண்ணித் துணிந்து மேற்கொள்ளப்பட்டதொன்று என்பதால் அச் சோகம் எல்லை கடந்த தொன்றாகின்றது.

வழிவழி மகத்துவமும் கீர்த்தியும் மிக்க அறிஞர் மற்றும் தெய்வத் தன்மை பொருந்திய பெரியார்கள் வரிசைக்கே அப்பெருமை சேரும்படியாக இலங்கைத் தமிழர்களுக்கு ஆத்மீக அறிவுப் பெட்டகமாக யாழப்பாணம் புகழுடன் விளங்கி வருவது நன்கு அறியப்பட்டதே.

சிரஞ்சீவிகளான புகழுடம்பு எய்தப்பெற்ற பல்லோருள்ளும் ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலர், கலைஞானி ஆனந்த கே. குமார சுவாமி, அருள்திருத்தந்தை ஞானப்பிரகாச அடிகளார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# துறைமுக நகருக்குள் இரு சட்டங்களுக்கு இடமில்லை - ஓமல்பே

(கொழும்பு)
பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம், புத்தசாசனம் பாதுகாப்பு மற்றும் புத்தமத வளர்ச்சி என்ற அரசியலமைப்பிலான ஏற்பாட்டுக்கு முரணானது. துறைமுக நகருக்குள் இரு சட்டங்கள் செல்வாக்கு செலுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

புத்தசாசன கொள்கையினை பாதுகாக்க புத்தசாசன அமைச்சு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து ஓமல்பே சோபித தேரர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை புத்தசாசன அமைச்சில் முறைப்பாடளித்தார்.

ஒரு நாடு - ஒரு கொள்கை என்ற சட்டத்தை அமுல்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது நடைமுறையில் உள்ள பொதுச்சட்டத்துக்கு முரணாக செயற்படுகிறது.


நாட்டின் இறையாண்மையினை பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு மாத்திரமல்ல நாட்டு மக்களுக்கும் உண்டு. அரசாங்கம் தவறான வழியில் செயற்படும் போது தவறை சுட்டிக்காட்டும் பொறுப்பு நாட்டு மக்களுக்கு உண்டு. துறைமுக நகர ஆணைக்குழு சட்ட மூலத்தினால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படுவதற்கு இடமளிக்க முடியாது எனத் தெரிவித்தார். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## சந்தோஷம் தரும் சங்கடஹர சதுர்த்தி



விநாயகர் முழுமுதற் கடவுள் ஆவார். விநாயகர் என்ற சொல்லுக்கு "தனக்கு மேலே வேறொரு தலைவன் இல்லாதவன்" என்று பொருள். விக்னங்களுக்கு அதிபதியான அவர் நாம் தொடங்கும் சுபகாரியங்களுக்கு இடையூறு எதுவும் ஏற்படாமல் அருளாசி புரிகிறார்.

நினைத்த காரியம் தொடங்கும் செயல்கள் எதுவாயினும் இலகுவாக முடிய விநாயகரின் திருவருள் முக்கியமானது. அதனால் தான் எந்த ஒரு செயலையும் தொடங்கும் போது விநாயகர் பூஜையை முதலில் செய்கின்றனர்.

ஆவணி மாதம் சுக்ல பட்ச நான்காம் நாள் "விநாயகர் சதுர்த்தி" கொண்டாடப்படுகிறது. சங்கடஹர சதுர்த்தி என்றால் என்ன?

அதைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் பலன் என்ன? சங்கம் என்றால் சேருதல் என்று பொருள். கஷ்டம் மனிதனின் வாழ்வில் சேருவதே (சங்+கஷ்டம்) சங்கஷ்டம் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. இந்த சங்கஷ்டமே பின்பு "சங்கட" மாக மருவி உருமாற்றம் பெற்று விட்டது. சங்கடத்தை நீக்குவதே சங்கடஹர சதுர்த்தியாகும்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமிக்கு அடுத்துவரும் நான்காம் நாள் சங்கடஹர சதுர்த்தியாகும். இது இருள் சூழும் மாலை நேரத்தில் வரும். நமக்கு வரும் துன்பங்களை, தடைகளை, கஷ்டங்களைத் தேய்த்து அழிப்பதற்காக ஏற்பட்ட ஒரு சிறப்பு மிக்க விரதம் இது.

மனிதருக்கு மட்டும் அல்ல தெய்வங்களுக்கும் தேவர்களுக்கும் கூட கஷ்டங்கள் வந்த போது அவர்கள் பிள்ளையாரை வணங்கி நலம் பெற்றுள்ளனர் என்பதை புராண வரலாறுகள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு பண்டிகை விரதத்திற்கும் காரண காரியங்கள் இருக்கின்றன. சங்கடஹர சதுர்த்திக்கு பல கதைகள் இருக்கின்றன.

முன்பு ஒரு காலத்தில் பிரம்மன், சிவ பெருமானை தரிசிக்க திருக்கயிலாயத்திற்குச் சென்றார். அப்போது நாரதர் அங்கே ஒரு கனியுடன் வந்திருந்தார். அந்தத் தெய்வீகக் கனியை முருகனுக்குக் கொடுக்கும் படி பிரம்மதேவன் சிவ பெருமானிடம் கூறினார்.

சிவனும் அந்தப் பழத்தை முருகனிடம் வழங்கினார். இதைப் பார்த்த மூத்த பிள்ளையான விநாயகருக்கு எரிச்சல் வந்தது. அவர் பிரம்மதேவனை கோபத்துடன் பார்த்தார். விநாயகரின் கோபப் பார்வை பிரம்மனை அஞ்சி நடுங்கச் செய்தது.

தன் தவறை உணர்ந்த பிரம்மன் விநாயகரை நோக்கி முழுமுதற் பெருமானே என் பிழையை பொறுத்தருள வேண்டும் என்று சொல்லி இரு கரம் குவித்து தலைதாழ்த்தி உடம்பை குறுக்கிக் கொண்டு பணிந்து நின்றார். இக்காட்சியை அங்கு இருந்த சந்திரன் பார்த்தான். முனிவர்கள் கூடியிருந்த சபையில் [illegible] தான் சந்திரன். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## 340 கிலோ ஹெரோயினுடன் ஐந்து இலங்கையர்கள் கைது

(சென்னை)
கொச்சி கடற்பரப்பில் இலங்கை படகொன்றிலிருந்து சுமார் 340 கிலோ ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக ஐந்து இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்திய போதைப் பொருள் கட்டுப்பாட்டு பணியகம் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையிலேயே சுமார் 340 கிலோ ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (நி-4)

## கொரோனா அபாயம் ஆடையகங்கள் மூடல்

(மஹரகம)
மஹரகம - பமுனுவ பிரதேசத்தில் 20 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து இரண்டு ஆடையகங்கள் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை புத்தாண்டு முடிவடைந்துள்ள நிலையில் நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகரித்துக் காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## மதுபோதையில் சாரத்தியம் 905 பேர் கைது

(கொழும்பு)
கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நேற்று முன்தினம் வரையான காலப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்காக 905 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 260 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 260 | 180 | 120 |
| தக்காளி | 180 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 50 |
| கோவா | 80 | 120 | 120 |
| கரட் | 250 | 160-200 | 240 |
| பூசணி | 60 | 70 | 80 |
| புடோல் | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 160 |
| பயற்றங்காய் | 250 | 80 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 80 | 90 | 120 |
| கறிமிளகாய் | 250 | 140 | 150 |
| முருங்கைக்காய் | 800 | 450 | 600 |
| போஞ்சி | 220 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 260 | 100 |
| கீரை - 1 பிடி | 60 | 30 | 50 |
| தேசிக்காய் | 150 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 120 | 280 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 40 |
| வல்லாரை | 60 | 20 | 40 |
| ஈரப்பலா | -- | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகசேவை உத்தியோகத்தருக்கான போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி (சனிக்கிழமை) நடைபெறவுள்ளது.

குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் '' செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு , வடக்கு மாகாணம் , இல : 393/48, கோவில் வீதி , நல்லூர், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (5-4)



வடக்கு மாகாண சேவையில் பட்டதாரிப் பயிலுநர்களாக நியமிக்கப்பட்டவர்களில் 361 பேருக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆளுநர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், வடக்கு ஆளுநரின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்- ரவிசாந்)

# குப்பை மேடாகும் மேய்ச்சல் தரவைகள் உரியவர்கள் தடுப்பார்களா?

(சாவகச்சேரி)

கைதடி மத்திய பகுதியிலுள்ள குளம் மற்றும் கடற்கரைச் சூழலை அண்மித்து அமைந்துள்ள மேய்ச்சல் தரவையானது குப்பை மேடாக மாறி வருவதாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி நி.கலைவாணி சுட்டிக்காட்டியுள்ளார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைதடி மத்தியில் அமைந்துள்ள குளம் மற்றும் கடற்கரையை அண்மித்த இயற்கை மேய்ச்சல் தரவையானது தனியார்களின் குப்பை மேடாக மாறி வருகிறது.

எனவே இயற்கை மேய்சசல் தரவையில் குப்பைகள் கொட்டுவதனைத் தடுப்பதுடன், மேய்ச்சல் தரவையை சுத்தப்படுத்தி கால்நடை வளர்ப்போர் பயன்படுத்த பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். என அவர் தெரிவித்தார்.இது தொடர்பான பிரேரணை ஒன்றினையும் அவர் சபையில் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

# சொற்பொழிவு

(குப்பிழான்)

புத்தூர் கிழக்கு தேரம் பிள்ளையார் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திரு விழாவை முன் னிட்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மேற்படி ஆலயப் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் இளம் சைவப் புலவர் சிவநெறிச்செம்மல் ச.நவநீதன் "விநாயகரின் திருப்பெரும் வடிவம்" எனும் தலைப்பில் சொற் பொழிவாற்றுவார். (5-4-18)

# வெசாக் வெளிச்சக் கூடுகள் தயாரிக்கும் போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய வெசாக் நிகழ்வினை முன்னிட்டு 2021. 05.23-2021.05.29 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் இடம் பெறவுள்ள வெசாக் வெளிச்சக் கூடு அமைக்கும் போட்டியில் அரச பிரிவு, பாடசாலை பிரிவு மற்றும் திறந்த பிரிவு ஆகிய பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி அரச நிறுவனங்கள், பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள் மற்றும் தனியார் ஆக்கதாரர்கள் இப் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

இப்போட்டிக்கான அறிவுறுத்தல்களை சகல பிரதேச செயலகங்களிலும் பார்வையிட முடியும்.போட்டிக்காக விண்ணப்பித்தவர்களில் ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் 25 போட்டியாளர்களுக்கு வெசாக்கூடு தாயரித்தலுக்கான செலவாக ரூபாய் 20 ஆயிரம் வழங்கப்படுவதுடன் வெற்றியீட்டும் முதல் மூன்று இடங்களுக்கு பெறுமதியான பணப் பரிசில்களும் வழங்கப்படும்.

அத்துடன் கலந்து கொண்ட ஏனைய போட்டியாளர்களுக்கும் பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலும் இப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகங்களில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்டச் செயலக நிர்வாகக் கிளைக்கு கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் அறிவித்துள்ளார். (5-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2290

### கவிஷ்நயி

அதிக தலைக்கனம் கொள்ளாதீர்கள்..
அதை நீங்களே சுமக்க
வேண்டி வரும்...!




### கேனிகா

உன்னால் முடியும் என்று உன்னை
ஊக்கப்படுத்தும் மனிதர்க
ளுடன் பழகு.
அவர்கள்
தான் நீ
விழும்
போதெல்லாம்
உன்னைத்
தாங்கி
முன்னேற்றிச்
செல்வார்கள்



### ருஷிகா



அம்மா இருக்கும் வரை உனக்கு
உலகம் தெரியாது, அவள்
இல்லையென்றால் உனக்கு வாழவே தெரியாது

### கயலக்ஷன்

கஷ்டத்திலேயே
பெரிய கஷ்டம்
எது தெரியுமா சேர்!
நம்ம கஷ்டத்த
ஒருத்தனிடம்
சொல்ல போய்...
கடைசியில் அவன்
கஷ்டத்தை
விடிய விடிய
கேக்கிறது தான் சேர்...



### ஜதீசன்

யாரோ கேட்டார்கள் நீங்கள் பெரிய மகான்,
தரையில் ஏன் அமர்ந்துள்ளீர்கள்?



புத்தர் சொன்னார், தரையில் அமர்பவன்
ஒருபோதும் தவறி விழமாட்டடான் என்று

### பிரதீபன்

சந்தோசம் என்பது ரோட்டில்
கிடைக்கும் பணம் மாதிரி....
எடுத்தவன் என்ஜாய்
பண்றான்...
தொலைத்தவன்
ஃபீல் பண்றான்....



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.

– கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்கள அரசியல்வாதிகளின் துணிவைப் பாராட்ட வேண்டும்

பயங்கரவாதம், பயங்கரவாதி என்பதற்கு இன்னமும் சரியான வரைவிலக்கணத்தை எட்டமுடியவில்லை.

இதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்தால், ஒரு தரப்புக்கு பயங்கரவாதியாகத் தெரிபவர் இன்னொரு தரப்புக்கு மீட்பராகத் தெரிகிறார்.

ஆக, பயங்கரவாதம் என்பதை எந்த வகைக்குள் அடக்குவது என்பதுதான் இன்று வரை இருக்கக்கூடிய கேள்வி.

இஃது ஒருபுறம் இருக்க, நாம் ஆளும் தரப்பு என்பதற்காக ஜனாதிபதி, பிரதமர் என்போர் எது செய்தாலும் சரி என்று கருதி அரசியல் நடத்துகின்றவர்கள் இருக்கிறார்கள்.

மாறாக ஆளுங்கட்சியாயினும் பிழை செய்தால் அது பிழை. பதவிக்காகவும் அரசு கவுண்டு விடும் என்பதற்காகவும் உண்மைகளை மறைத்து பொய்யுரைப்பது மக்களுக்கும் நாட்டுக்கும் செய்கின்ற துரோகம் என்று கருதி நாட்டுக்கு விசுவாசமாக நடப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

இதில் அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்வதாகச் சிலர் கூறிக் கொள்ளலாம்.

ஆனால் அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்படுகின்றனராயினும் அதன் மறுபுறம் நாட்டைக் காப்பாற்றுவதற்காக அவர்களின் செயற்பாடுகள் உள்ளன என்று வாதிடுவோரும் உளர்

எது எவ்வாறாயினும் இலங்கையில் அமையப்பெற்ற துறைமுக நகரத்தை சீனாவுக்குக் கையளித்த விவகாரம் ஆளுந் தரப்பை உலுக்குகிறது.

இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், ஆளுந்தரப்பில் இருக்கக்கூடிய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்தின் போக்கை எதிர்க்கின்றனர் என்பதுதான்.

அதாவது துறைமுக நகரத்தை சீனாவுக்கு வழங்குவதனூடு இலங்கையின் இறையாண்மைக்கு கேடு வரப் போகின்றது. அதனை அனுமதிக்க முடியாது என்று; ஆளுந்தரப்பில் இருக்கக்கூடியவர்கள் அரசாங்கத்தை எதிர்க்கின்றனர் எனில் அவர்களின் துணிவை நிச்சயம் பாராட்ட வேண்டும்.

சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் தமிழ் இனத்துக்கு எதிரான்வர்களாக – எமக்கு எதிரான கருத்தை உடையவர்களாக இருக்கலாம்.

ஆனால் தேர்தல் காலத்தில் தாம் சார்ந்தவர்கள் ஆட்சியமைக்க வேண்டும் என்பதற்காகக் கடும் பிரசாரம் செய்து, ஆட்சிப்பீடத்தில் ஏற்றி வைத்த போதிலும் அரசாங்கத்தின் செயலால் நாட்டுக்கு ஆபத்து எனும்போது அரசாங்கத்தை எதிர்ப்பது தமது கடமை என்று நினைத்து அதனைச் செய்கின்றவர்கள் வித்தியாசமானவர்கள் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

அந்தவகையில் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ, அமைச்சர் விமல் வீரவன்ஸ, இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார போன்றவர்களின் துணிச்சலை நிச்சயம் பாராட்ட வேண்டும்.

## கஞ்சா பயிரிடுவதனை சட்டமாக்க வேண்டும்

### பாராளுமன்றத்தில் டயானா எம்.பி

(கொழும்பு)

காலை 9 மணிக்கு மதுபானத்தைப் பெற்றுக் கொள்ள எவரும் வருவதில்லை எனவும் காலை 10 மணியில் இருந்து இரவு 10 மணி வரை மதுபான விற்பனை நிலையங்களை திறந்து வைக்க அனுமதி வழங்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கஞ்சா பயிரிடுவதை சட்டமாக்கி, அறுவடைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற யோசனையையும் அவர் முன்வைத்துள்ளார். அரசாங்கத்தின் அனுசரணையில் இதனைச் செய்ய வேண்டும். அதில் கிடைக்கும் பணத்தை கடன் சுமையில் இருந்து தப்பிக்க பயன்படுத்த வேண்டும்.

இலங்கை என்பது சுற்றுலா சொர்க்கம். மதுபான விற்பனை நிலையங்களை காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்து வைக்க வேண்டும். நாட்டு மக்கள் நாள் கணக்கில் சம்பாதிக்கும் பணத்தை செலவிட சந்தர்ப்பம் இல்லை.இதனால், இரவு நேர பொருளாதாரம் என்ற எண்ணக்கருவை அறிமுகப்படுத்த வேண்டும். இவை நாட்டை முன்னேற்றக் கூடிய வழிகள் எனவும் டயானா கமகே குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான டயானா கமகே 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளித்து அரசாங்கத்துடன் இணைந்துக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** ஆவரங்கால் சந்தை, ஆவரங்கால் சிவன் கோயில், கலைமகள் சந்தி புத்தூர், மட்டுவில் வீதி புத்தூர், நாவற்காடு அச்சு வேலி, பெரிய பொக்கணை, புத்தூர், ஊறணி, வாதரவத்தை, வாதரவத்தைவீரவாணி, ஆலடி, இளவாலை, இளவாலை மாரீசன்கூடல், மெய்கண்டான், பெரியவிளான், பெரியவிளான் சந்தி, சேந்தான்குளம், சென் ஜேட் இளவாலை ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கிராஞ்சி, சிவபுரம், பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** வீரபுரம், ஆச்சிபுரம், ஆசிக்குளம், எல்லப்பர் மருதங்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம், மகாறம்பைக்குளம், மதுரநகர், கல் நாட்டினகுளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இறந்த கோழிக்குஞ்சுகளை ஆலயச் சூழலில் வீசிய விசமிகள்

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்தை அண்டிய பகுதியில் உயிரிழந்த கோழிக்குஞ்சுகளை வீசிச் சென்றுள்ளமையால் சுகாதார சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள ஆலயத்திற்கு முன்பாகவுள்ள பள்ளத்தில் விசமிகள் சிலர் உயிரிழந்த நிலையில் காணப்படும் நூற்றுக் கணக்கான கோழிக் குஞ்சுகளை நேற்று மாலை எறிந்துவிட்டு சென்றுள்ளனர்.

இதனால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசிவருவதுடன், சுகாதார சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது.

குறித்த பகுதிக்கு அருகில் சிறுவர் பூங்கா மற்றும் ஆலயம் அமைந்திருப்பதனால் அதிகமான பொதுமக்கள் சென்றுவரும் இடமாக அது காணப்படுகின்றது.

இந்நிலையில் இவ்வாறான நாசகார செயலை செய்தவர்கள் அடையாளம் காணப்பட்டு கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-3,299)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை வடக்கு வேம்பிராய் கான்றைச் சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் 01 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ம-3)

## சிற்பரத வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை வடக்கு வேம்பிராய் கான்றைச் சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் ஆலயத்தின் சைவாகம திராவிட மரபு முறையமைந்த சிற்பசாஸ்திரோன்னத சிற்பரத வெள்ளோட்ட விழா எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பகல் 9 மணியிலிருந்து 10.30 மணி வரையுள்ள சுப வேளையில் இடம்பெறவுள்ளது. (ம-3)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

ஸ்ரீராமகிருஷ்ணர்: 'பிரதாபின் சகோதரன் இங்கே வந்து சில நாட்கள் தங்கியிருந்தான். வேலைவெட்டி எதுவும் இல்லை. இங்கேயே தங்கிவிடப் போவதாகச் சொன்னான். மனைவி மக்களை மாமனார் வீட்டில் விட்டு வைத்திருக்கிறானாம். இதைக் கேள்விப்பட்டதும் அவனைக் கடுமையாகத் திட்டினேன். நீயே சொல். அவனுடைய குழந்தை குட்டிகளை ஊராரா சோறு போட்டு வளர்ப்பார்கள்? வெட்கம் கெட்டவன்! அவனுடைய குழந்தைகளை வேறு யாரோ கவனித்துக் கொள்கிறார்கள்! அவர்களை மாமனார் வீட்டில் விட்டு வந்திருக்கிறான். முதலில் ஒரு வேலை தேடிக் கொள்ளும்படி சொல்லி கடுமையாக ஏசினேன். அதற்குப் பிறகுதான் இந்த இடத்தைவிட்டு நகர்ந்தான்.

'ஆமாம் உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா?'

ம-: 'ஆம்.'

ஸ்ரீராமகிருஷ்ணர் (அதிர்ந்துபோய்): 'ஏ ராம்லால், இவனுக்குத் திருமணம் ஆகிவிட்டதாம்!'

ஏதோ மாபெரும் அபராதம் செய்துவிட்டவர் போல் ம-தலை குனிந்து, வாய் மூடி, மௌனமாக உட்கார்ந்திருந்தார். 'திருமணம் செய்துகொள்வது அவ்வளவு பெரிய குற்றமா என்ன!' என்று தனக்குள் நினைத்துக்கொண்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2021 - 14.05.2021



சிம்ம ராசி வாசகர்களே!

பிலவ வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே குரு பகவான் உங்கள் இராசியைப் பார்க்கின்றார். எனவே கல்யாண முயற்சிகள் கைகூடும். தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளாக எதிர்பார்த்த புதிய ஒப்பந்தங்கள் இப்பொழுது கைக்கு வந்து சேரும். உற்சாகத்துடன் பணிபுரியும் நேரம் இது.

**கூட்டுக்கிரக யோகம்**

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில், இராசிநாதன் சூரியன், தனலாபாதிபதி புதன், சகாய தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன், விரயாதிபதி சந்திரன் ஆகிய கிரகங்கள் இணைந்து சஞ்சரிக்கின்றன. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஆதாயம் தரும் தகவல்கள் வந்து கொண்டேயிருக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். தொழில் போட்டி மறையும். தொழிலை விரிவு செய்ய ஒத்துழைப்பு கிடைக்கும். வளமான எதிர்காலம் அமைய அடித்தளமிடும் நேரம் இது.

**செவ்வாய்-சனி பார்வை**

மாதத் தொடக்கத்தில் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், 6இல் சஞ்சரிக்கும் சனியைப் பார்க்கின்றார். பகை கிரகங்களின் பார்வையால் எதிர்பாராத சில திருப்பங்கள் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாவர்கள். ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் தாமதப்படும். கொடுத்த வேலையைச் செய்ய முடியாமல் தடுமாற்றம் ஏற்படும். பத்திரப் பதிவில் சிக்கல் உருவாகலாம்.

**ரிஷப-புதன் சஞ்சாரம்**

## கல்யாணக் கனவுகள் நனவாகும்!

ஏப்ரல் 28 ஆம் திகதி, மேட இராசிக்கு புதன் செல்கின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். உங்கள் இராசிக்கு தனலாபாதிபதியான புதன், தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து, பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுக்க முன்வருவர். கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். வளர்ச்சி அதிகரிக்கும் நேரம் இது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

**ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்**

மே 8 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு




சுக்கிரன் செல்கின்றார். இக்காலத்தில் 'புத சுக்கிர யோகம்' செயல்படப் போகின்றது. எனவே தொழிலில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்கும். கிளைத் தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

பயணங்களால் பலன் உண்டு. வீட்டிற்குத் தேவையான அத்தியாவசிய மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் எண்ணம் மேலோங்கும்.

**சனியின் வக்கிர காலம்**

மே 12 ஆம் திகதி முதல், மகரத்தில் சஞ்சரிக்கும் சனி வக்கிரம் பெறுகின்றார். குடும்பத்தில் ஒவ்வொரு நாளும் பிரச்சினைகள் அதிகரிக்கும். மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை உயரும்.


ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்குவீர்கள். இக்காலத்தில் சிறப்பு வழிபாடுகளையும், பரிகாரங்களையும் செய்து கொள்வதன் மூலம் தான், ஓரளவேனும் நற்பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும். இம்மாதம் ராகு-கேதுக்களை முறையாக வழிபாடு செய்யுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து, பல காரியங்களை முடித்துக் கொடுப்பர். கணவன் - மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைக்குரியதாக அமையும். தாய் மற்றும் உடன்பிறப்புகள் தக்க சமயத்தில் கைகொடுத்து உதவுவர்.

கல்யாணக் கனவுகள் நனவாகும். பணிபுரியும் பெண்களுக்கு, பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



கன்னி ராசி வாசகர்களே!

பிலவ வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் நான்கு கிரகங்கள் இணைகின்றன. அஷ்டம ஸ்தானம் வலுப்பெறுவதால், இம்மாதம் விரயங்கள் அதிகரிக்கும். 'நினைத்தது நிறைவேறவில்லையே' என்று கவலைப்படுவீர்கள்.

**கூட்டுக்கிரக யோகம்**

உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில், இராசிநாதன் புதன், தன - பாக்கியாதிபதி சுக்கிரன், விரயாதிபதி சூரியன், இலாபாதிபதி சந்திரன் ஆகிய கிரகங்கள் கூடியிருக்கின்றன. அஷ்டம ஸ்தானம் வலுப்பது அவ்வளவு நல்லதல்ல. என்றாலும் ஒரு சில கிரகங்கள் 8இல் இருப்பதால் நன்மைதான். குறிப்பாக 12இற்குரிய சூரியன் 8இல் இருப்பதால் 'விபரீத ராஜயோகம்' செயல்படும். அதன் விளைவாக திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். பொருளாதாரத்தில் திடீர் தனவரவும், திடீர் செலவும் உண்டு. சுக்கிரன் 8 இல் இருப்பதால் குடும்பச்சுமை கூடும். 6இல் குரு இருப்பதால், மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும்.

**செவ்வாய் - சனி பார்வை**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 10ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில், செவ்வாய் சஞ்சரிக்கின்றார். அங்கிருந்து பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியைப் பார்க்கின்றார். எனவே பூர்வ புண் ணிய ஸ்தானம் பலமிழக்கின்றது. தொழில் வளர்ச்சியில் திடீர் மாற்றம் ஏற்படும். தன்னம்பிக்கை குறையும். செலவு அதிகரிக்கும். ஆரோக்கிய பாதிப்பு ஏற்படும். சொத்து விற்பனையால் சில பிரச்சினைகள் உருவாக லாம்.

## விரயங்கள் அதிகரிக்கும் காலம்!

**ரிஷப - புதன் சஞ்சாரம்**

ஏப்ரல் 28 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கின்றார். இக்காலம் ஒரு இனிய காலமாக அமையும். புதன், உங்கள் இராசிநாதனாக மட்டுமன்றி தொழில் ஸ்தானத்திற்கும் அதிபதியாக விளங்குவதால் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சேமிப்பு உயரும். 10இற்கு அதிபதி 9இல் சஞ்சரிக்கும் பொழுது, பெற்றோர் வழியிலும், மற்ற வழியிலும் பணம் வந்துசேரும். உற்றார் -உறவினர்கள், உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர்.




**ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்**

மே 8ஆம் திகதி, ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். இராசிநாதன் புதனோடு, தன - பாக்கியாதிபதி சுக்கிரன் இணைவதால் 'புத சுக்கிர யோகம்' உருவாகிறது. எனவே பொருளாதார நிலை உயரும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சி கைகூடும். 'வெளியூரில் இடம் வாங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள். ஆபரணம் வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும்.

**சனியின் வக்கிர காலம்**

மே 12 ஆம் திகதி முதல், மகரத்தில் சஞ்சரிக்கும் சனி வக்கிரம் பெறுகின்றார். இதன் விளைவாக பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்படலாம். உடல்நிலையில் பழைய நோய் தலைதூக்கும். உத்தியோகத்தில் திடீர் இடமாற்றம் ஏற்படலாம். திசாபுத்தி பலமிழந்தவர்களுக்கு தற்போதுள்ள தொழில் ஸ்தம்பித்து நிற்கும். நண்பர்கள் பகையாகலாம். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். இம்மாதம் வராகி வழிபாட்டை செவ்வாய்க்கிழமை தோறும் மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

அஷ்டமத்தில் கிரகங்கள் வலுப்பெற்றிருப்பதால், எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செயல்படுங்கள். வீடு மாற்றங்கள் உறுதியாகலாம். கணவன் - மனைவிக் குள் கருத்து வேறுபாடு அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு ஓரளவு கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்களோடு இணைந்து செயல்பட மறுப்பர். பிள்ளைகளால் பிரச்சினை வரலாம்.

பணி புரியும் பெண்களுக்கு திறமைக்கேற்ற அங்கீகாரம் கிடைப்பது அரிது. வழிபாட்டால் வளர்ச்சி காணலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கைதாகி...

கைது செய்யப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவின் மகன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவின் மகன் ரகித ராஜபக்ஷ கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர் ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ம-3)

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*

## முல்லையில்...

பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நல்லு சிவராசா என்பவர் முள்ளியவளை தண்ணீரூற்று மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் யாகசம் பெற்று வந்துள்ளார்.

இவர் பல தடவைகள் மது அருந்திய நிலையில் வீதிகளில் விழுந்து காணப்பட்டுள்ளார் என குறித்த பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் தண்ணீரூற்றுப் பகுதியில் வீதியில் காயமடைந்த நிலையில் விழுந்து கிடந்துள்ளார். இவரை அவசர நோயாளர் காவு வண்டி மூலம் முல்லைத்தீவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து குறித்து முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் இவரது உடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-3,281)

## கொழும்பு துறை...

ரும் எதிர்க் கட்சியின் பிரதான அமைப்பாளருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார். வருடத்தில் ஒருமுறை கோப் மற்றும் கோபா தெரிவுக்குழுக்களிடம் துறைமுக நகரின் கணக்காய்வுகளை முன்வைக்க வேண்டும் என்ற சரத்தை கொண்டு வருமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

துறைமுக நகர விசேட ஆணைக்குழு சட்டமானது கறுப்பு பணத்தை வெள்ளை பணமாக மாற்றும் உள்நோக்கத்தில் கொண்டு வரும் சட்டமாக இருக்கலாம் என வெளிநாடுகள்கூட சந்தேகம் வெளியிட்டுள்ளன.

அரசாங்கம், இலங்கையில் சீனா கால் பதிக்க இடமளித்து வருகிறது. பிராந்திய வல்லரசான இந்தியாவை பகைத்துக் கொண்டு எதனையும் செய்ய முடியாது எனவும் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## யாழ்ப்பாணத்தில்...

சாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் 643 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 7 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பாரதிபுரம் கிராமத்தில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த 5 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த இருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## துறைமுக நகரில்...

லாளர் பியத் பந்து விக்ரம தெரிவித்துள்ளார்.

குத்தகை மூலம் கிடைக்கும் காணிப் பகுதியை மாத்திரம் பயன்படுத்தும் உரிமையே முதலீட்டாளர்களுக்கு இருக்கின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விசேட பிராந்தியத்தில் டொலர் மூலமே கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும் என்பதுடன் சம்பளமும் டொலர்களியே வழங்கப்படும் என்றார். (ம-3)

## பருத்தித்துறை...

மதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்வாய் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் முத்து மாரியம்மன் கோவிலடி, அல்வாயைச் சேர்ந்த முருகராசா கௌசிகன் (வயது -38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும் அவரது சகோதரர்களான அகிலன் (வயது-36), வசீகரன் (வயது-31) மற்றும் அகிலனின் மகன் அஜயன் (வயது-15) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

உறவினர்களின் இரு பகுதியினருக்கு இடையில் ஏற்கெனவே இருந்த முரண்பாடு நேற்று பிற்பகல் மோதலாக மாறியது. இதனைத் தொடர்ந்து கத்தி, கோடரி மற்றும் வாள் கொண்டு தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் கத்தி மற்றும் கோடரி என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸார் தடயங்களை பெற்றதுடன் மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,18,33,60)

## வவுனியாவில்...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 7 பேருக்கே தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரப்படுபவர்கள் மற்றும் தென்பகுதிகளை சேர்ந்த பலர் வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பலருக்கு நேற்றுமுன்தினம் பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்ததுடன், யாழ்.ஆய்வுகூடத்தில் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அவர்களில் 7 பேருக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,299)

## ஆளும் கட்சி...

அறிவித்தல் வெளியிடப்பட்டு அதன் சட்ட மூலமும் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டால் இலங்கைக்குள் இன்னுமொரு தனி நாடு உருவாகக் கூடிய அபாயம் இருப்பதாக முன்னணி பௌத்த தேரர்கள் மட்டுமன்றி ஆளும் கட்சியிலுள்ள சில அரசியல்வாதிகளும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் போர்ட் சிட்டி தொடர்பான உத்தேச சட்டமூலம் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் அதுகுறித்த முக்கிய அறிவிப்பை விடுப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தயாராகி வருகின்றார்.

இதற்காக இன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு ஆளும் கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கட்சியிலுள்ள அமைச்சர்கள் மற்றும் [illegible]ன்ற உறுப்பினர்களுக்கு இதுகுறித்த தகவலை ஜனாதிபதி செயலகம் நேற்று வழங்கியிருக்கின்றது. (ம-3)

## கொழும்புத்...

அரசாங்கம் கொழும்புத் துறைமுக நகர் ஆணைக்குழுவிற்கான சட்டத்தினூடாக தனியான இராச்சியத்தை ஸ்தாபிப்பதற்குத் தேவையான கொள்கைகளை வகுப்பதாக ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர் பொருளாதார வலய ஆணைக்குழுவிற்கான சட்டமூலத்தை ஆட்சேபனைக்கு உட்படுத்தி முருத்தெட்டுவே ஆனந்த தேரரால் தாக்கல் செய்யப்பட்ட மனு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகினார். இதன்போதே பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-3)

## அரசு முறை...

முறைகேடான விதத்தில் பயன்படுத்தி தேசிய ரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த சட்ட மூலங்கள் நிறைவேற்றப்படக்கூடாது என்று சுட்டிக் காட்டியிருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் ஆராய்வதற்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறார்.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

இதுகுறித்து கரு ஜயசூரிய அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார். (ம-3)


**தன நிதானய**

திகதி - 2021.04.20
சீட்டிழுப்பு இலக்கம் - 494
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 15 43 52 69

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி: 20.04.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 2752
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கங்கள்: 22 39 48 67
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**

திகதி: 2021/04/20
சீட்டிழுப்பு இலக்கம்: 4457
ஆங்கில எழுத்து: V
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 5 1 3 0 2 6
தேசிய லொத்தர் சபை

**சுபிரி வாசனா**

சீட்டிழுப்பு திகதி: 2021/04/20
சீட்டிழுப்பு இலக்கம்: 1591
சுப்பர் இலக்கம்: 08
வெற்றி இலக்கங்கள்: 14 26 29 31

**மெகா பவர்**

திகதி: 20/04/2021
சீட்டிழுப்பு இலக்கம்: 0816
வெற்றி எழுத்து: I
சுப்பர் இலக்கம்: 16
வெற்றி இலக்கங்கள்: 07 13 28 40

**அத கோடிபதி** ADA KOTIPATHI

கிழமை: செவ்வாய்
சீட்டிழுப்பு இல: 1253
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 20.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 128,963,050
வெற்றி இலக்கங்கள்: 12 21 32 71
ஆங்கில எழுத்து: H
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா**

கிழமை: செவ்வாய்
சீட்டிழுப்பு இல: 3583
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 20.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,733,938
வெற்றி இலக்கங்கள்: 32 54 60 63
ஆங்கில எழுத்து: O
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி**

சுப்பர் ஜக்பொட் 2,904,199/=
திகதி: 20.04.2021
வெற்றி வாரம்: 3134
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள்: 16 28 37 50
இடபம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,817,600

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம்: 1427
நிறம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 20/04/2021
தினம்: செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: W 18 49 54 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் 52,415,840/=

**ஜயோதா**

சீட்டிழுப்பு வாரம்: 715
நிறம்: சிவப்பு
20.04.2021 செவ்வாய்
L 42 57 58 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,096,345
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார வழிகாட்டுதலை பின்பற்றாவிட்டால்
# பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் தடைப்படலாம்
### சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

சுகாதார வழிகாட்டுதல்கள் கடுமையாக பின்பற்றப்படா விட்டால் பயண கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் என சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில், பொறுப்பான முறையில் செயற்படத் தவறியமை மற்றுமொரு கொத்தணிக்கு வழிவகுக்கும் என தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

எனவே கொரோனாத்தொற்று பரவுவது குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்றும் அனைத்து நேரங்களிலும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவ்வாறு செய்யத் தவறினால் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் தடைப்படவழிவகுக்கும் என்றும் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார். (ம-03)

# கொழும்பில் முப்படையினர்

(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதலின் 2 வது ஆண்டை முன்னிட்டு கொழும்பு கொச்சிக்கடையில் உள்ள புனித அந்தோணியார் தேவாலயத்திற்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டிலுள்ள அனைத்து தேவாலயங்களுக்கும் நேற்றுக் காலை முதல் சிறப்பு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம-03)

# வவுனியாவில் விபத்து; முதியவர் காயம்

(வவுனியா )

வவுனியா பட்டானிச்சூர் மூன்றாம் ஒழுங்கைக்கு அண்மித்த பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - துவிச்சக்கரவண்டி விபத்தில் முதியவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வவுனியா - மன்னார் பிரதான வீதியூடாக வவுனியா நகர் நோக்கி துவிச்சக்கரவண்டியில் முதியவர் ஒருவர் பயணித்துக்கொண்டிருந்த சமயத்தில் அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவரை மோதித் தள்ளியதுடன் 500 மீற்றர் தூரம் பயணித்து தரித்து நின்றது.

இவ்விபத்துச் சம்பவத்தில் துவிச்சக்கர வண்டி பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் முதியவர் காயமடைந்துள்ளார். (ம-03)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (6649)

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை கிழக்கு, ஐயனார் வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
( தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 மீற்றர் தூரம் )
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
( தரகர் தேவையில்லை ) பரப்பு 5 இலட்சம். (6638)

077 814 7389
077 614 7333

**அஷ்டலக்ஷ்மி புத்தக நிலையம்**

**சித்திர புத்திர நாயனார் கதை**

சித்திர புத்திர நாயனார் கதை உட்பட அஷ்டலக்ஷ்மியின் அனைத்து வெளியீடுகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (C-2014)

இல. 41, கண்டி வீதி, கைதடி.

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

**பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org (6648)

021 222 8093 புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.

**சிவப்பு மணல் விற்பனைக்கு உண்டு**

பள்ள நிலங்கள் சீர்செய்வதற்கும் வீட்டு அத்திபாரங்களை நிரப்புவதற்கும் உகந்த சிவப்பு நிற மணல் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோருக்கு டிப்பர் மூலம் தங்கள் இடத்திற்கு கொண்டு வந்து வழங்கமுடியும். (C-2011)

தொடர்பு
077 649 1027
077 940 0963

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், உரும்பிராய், கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
(கோப்பாய் வீதி கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்.) (6653)

தொடர்பு கொள்ளும் நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் 5.30 மணி வரை
077 468 3354, 077 288 0152, 077 203 6402

**உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2021**

இடம் : உடுவில் இந்து இளைஞர் மண்டபம்
காலம் : எதிர்வரும் 26.04.2021 ( திங்கட்கிழமை )
நேரம் : பி.ப 5.00 மணி
விடயங்கள் : ❖ புதிய யாப்பு அங்கீகரித்தல்.
❖ புதிய நிர்வாகசபை தெரிவுசெய்தல்.

மேற்படி கூட்டத்தில் பழைய, புதிய அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இ.வாகீசன்
செயலாளர்,
உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம். (6652)

**வேலை வாய்ப்பு**

யாழ்.குடாநாட்டில் பிரசித்திபெற்ற நிதி நிறுவனம் ஒன்றில் அடிப்படைச் சம்பளத்துடன்கூடிய நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.
22.04.2021 இல் இருந்து நேர்முகத் தேர்வு இடம்பெறும்.

தகவல்களுக்கு அ. யூட்ஸ்சன்
இல. 86, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail: antonyjudeson1123@gmail.com
077 520 2726, 075 015 2726 (6641)

**வேலை வாய்ப்பு**

Study & Work in North Provincial
இலங்கையின் முன்னணி தொடர்பாடல் நிறுவனத்துடன் இணைந்து பயிற்சியுடன் பணிபுரியும் வாய்ப்பு.

O/L, A/L கற்றிருத்தல், வயது 18 - 28 வரை, அனுபவம் அவசியமற்றது. பதவி - Customer Service, Asst. Manager, Coordinator, Supervisor, Management Trainees

குறைந்த வருமானம் 18,000/= இல் இருந்து 45,000/= வரை பதவிக்கேற்ப வழங்கப்படும்.

எங்களுடன் இணைந்து கொள்வதற்கு சுயவிபரக் கோவை, பிறப்புச் சான்றிதழ், சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை பிரதியுடன் நேர்முகத் தேர்வுக்கு அழைக்க. (6654)



தொடர்புகளுக்கு
Inner Circle pvt. Ltd
No. 100/3, 3rd Floor,
076 770 7759

**பணிப்பெண் தேவை**

அராலியில் உள்ள வீடொன்றில் வயோதிபப் பெண்ணை தங்கி நின்று பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. (6638)

077 923 8976

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-2006)

| | | | |
|---|---|---|---|
| 976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2004)

0768226240

**உடனடி வேலை வாய்ப்பு**



V2 TRAVELS
விரைவு பொதிகள் சேவை (C-2005)

வாடிக்கையாளர் சேவை அலுவலர்

எமது அனைத்து கிளைகளிலும் வேலை செய்யக்கூடியவராகவும் அதிக நேரம் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

வயது :-35 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள் மட்டும்)
சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்
சம்பளம் - 25'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777068777
v2vacancies@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.